


AHARAM

# அகரம்

தரம் 5 - 11 வரை | எண்: 08 எழுத்து: 01 ஜனவரி 2014 | www.aharam.lk




# 2013 நிகழ்வுகள் ஒரு கண்ணோட்டம்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 08 ஜனவரி: 2014 எழுத்து:01

AHARAM அகரம்

உள்ளே...




வரலாற்று நாயகன் நெல்சன் மண்டேலா 20



சிவப்பு நண்டுகள் 06



வெற்றியாளனின் பண்புகள் 23



இளம் ஓவியன் கெய்ரான் வில்லியம்ஸன் 37







12




38




08

## பாடத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 27 | வரலாறு | 17 |
| விஞ்ஞானம் | 33 | புலமைப் பரிசில் | 39 |



பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

பொறுப்பாசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

உதவி ஆசிரியர்
எம்.எஸ்.அலா அஹமட் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்



தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 011 268 9324
பெக்ஸ் : 011 268 6030
www.aharam.lk
E.mail: editor@aharam.lk



**சந்தா விபரம்**
தனிப்பிரதி 40/-
1 வருட சந்தா 700/-
6 மாத சந்தா 350/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வியாண்டு புத்துணர்ச்சியுடன் துவங்கட்டும்!




அன்பின் மாணவ வாசகர்களே!

புதிய கல்வியாண்டின் தொடக்கத்தில் அகரம் உங்கள் மலர்க் கரங்களில் தவழ்வதில் பெருமிதமடைகின்றது. உங்களது புதிய கல்வியாண்டு புத்தாக்க ஆண்டாக வேண்டும் என்பதே எமது உளமார்ந்த பிரார்த்தனையாகும்.

மாணவர்களே! கடந்த கல்வியாண்டை மீள ஒருமுறை திரும்பிப் பாருங்கள். கற்றுக் கொள்ளவும் பாடம் பெறவும் பல படிப்பினைகள் அங்கிருக்கும் என்று நம்புகின்றோம். புதுமைகள் பல செய்திருப்பீர்கள்; செய்தவை புதுமைகளாகியிருக்கும். அவை இன்னுமின்னும் மிளிர்வதற்கு சிந்தியுங்கள். சிந்திப்பதும் அதனை சாத்தியமாக்க மீண்டும் மீண்டும் உழைப்பதும் புதிய வழிகளை கண்டுபிடிப்பதும் துணிச்சலும்தான் புத்தாக்கத்தின் அடிப்படைகள்.

களியாட்ட சிந்தனை, பொறுப்புணர்ச்சியற்ற மனோநிலை, சோம்பல், அவசரமாக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற போக்கு, கண்மூடித்தனமாகப் பின்பற்றல், கண்ணுக்குத் தெரியும் இலாபங்களுக்காக மட்டுமே செயலாற்றுதல், பிறரில் தங்கியிருத்தல்... இவைதாம் இளைய சமூகத்தைப் பாதித்து வரும் ஆபத்தான நோய்கள். இவை நம் உடல் வலிமையையும் உள வலிமையையும் அழித்து விடும்.

மனிதன் அல்லாஹ்வின் மிக அழகிய படைப்பு. புதுமையாக சிந்திப்பதும் அதனை பூமியிலும் ஆகாய வெளியிலும் சாத்தியமாக்க கடுமையாக முயற்சிப்பதும் தான் அவன் ஏனைய படைப்புகளை விட்டும் வேறுபடுகின்ற இடம். காடுகளுக்குள்ளும் கற்குகைகளுக்குள்ளும் வாழ்ந்த மனிதன் இன்று கண்கவர் பெரு நகரங்களை உருவாக்கி விட்டான். நீர் நிலைகளைக் கடக்க வெறும் மரக்கட்டைகளைப் பயன்படுத்தத் தொடங்கிய மனிதன் விளையாட்டரங்கு உட்பட சகல வசதிகளும் கொண்ட இராட்சதக் கப்பல்களை சமுத்திரங்களில் ஓட விட்டுள்ளான். காலத்தை சுருக்கிவிட ஆகாய வழியை சமைத்து விட்டான். அப்பப்பா மனிதன் செய்து விட்ட புதுமைகள் ஒன்றா இரண்டா! இப்படியெல்லாம் செய்து விட்டவன் மனிதன்தான், மனிதனேதான். ஏன் என்றால் அவன் அல்லாஹ்வின் அழகிய அற்புதப் படைப்பு. அவனுக்குள் அல்லாஹ் ஆயிரமாயிரம் ஆற்றல்களை வைத்தே படைத்துள்ளான்.

சிந்திக்க மாட்டீர்களா? நீங்கள் ஆய்வு செய்ய வேண்டாமா? நல்லுணர்ச்சி பெறுவோர், சிந்திப்போர் யாருமில்லையா? அறிவுடையோருக்கு படிப்பினைகள் உண்டு. வானங்கள் பூமியின் படைப்பில் சிந்திப்போருக்கு அத்தாட்சிகள் ஏராளம். இவ்வாறு அல்குர்ஆன் எம்மை புத்தாக்க சிந்தனைக்கு தூண்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபூ ஹானிம்

வாழும் அற்புதம் அல்குர்ஆன்

# அல்குர்ஆன் கூறும் கதைகள்

நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்த விடயத்தை மரமும், குறித்த நிலப் பரப்பும் சாட்சி சொல்வதாக வாக்களித்த உடன் சிறுவன் உற்சாகத்துடன் தன் கிராமத்தவரிடம் திரும்பினான்.

நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்தித்ததாக தன் சகோதரனிடம் சிறுவன் கூறினான். அவனோ அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு அதனை எவரிடமும் கூற வேண்டாம் என்று தடுத்தான். ஏனென்றால் ஆதாரமற்ற ஒரு செய்தியை அச்சமூகத்தாரிடம் எடுத்துரைத்தால் அவரை அச்சமூகம் கொன்றுவிடும். இவை எவற்றையும் பொருட்டாகக் கருதாத அச்சிறுவன் தீர்க்கமான முடிவோடு அரசனைச் சந்திக்கத் துணிந்தான்.

அரசனைச் சந்தித்து நான் நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்தித்தேன். அவர் உங்களுக்கும் தன் சமூகத்தாருக்கும் தனது ஸலாமை உரைக்குமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். அதனை நான் உங்களுக்கு எத்தி வைக்கின்றேன் என அச்சிறுவன் மிகத் தெளிவாகக் கூறினான். சிறுவன் பொய்யுரைக்கின்றான், ஆதாரம் எதுவுமில்லாமல் செய்தியொன்றைப் பரப்புகின்றான் என்று அரசன் எண்ணினான். அச்சமூகத்தின் வழக்கிலுள்ள சட்டத்தை அமுல்படுத்த அரசன் தீர்மானித்தான். சிறுவனுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற அதிகாரிகளைப் பணித்தான்.

அப்போது அச்சிறுவன் மன்னரே! இச்செய்தியை நான் எவ்வித ஆதாரமுமின்றி தங்கள் அவைக்கு எடுத்து வரவில்லை. அதற்கு என்னிடம் மிகப் பலமான அத்தாட்சிகள் இருக்கின்றன என்றான். அரசன் ஆச்சரியமடைந்தான். சாட்சிகளை காண முடிவு செய்தான். உடனே அச்சிறுவனோடு தன் குடிமக்களை அனுப்பினான். நபி யூனுஸை சந்தித்த இடத்தை நோக்கி மக்களை அச்சிறுவன் அழைத்துச் சென்றான். அவ்விடத்தை அடைந்த போது சிறுவன் சாட்சி சொல்வதற்கு அல்லாஹ்வின் அனுமதியோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அம்மரத்தையும் குறிப்பிட்ட நிலப் பகுதியையும் சான்று சொல்லுமாறு சிறுவன் கேட்டுக் கொண்டான். அவை சிறுவன் நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்து உரையாடினான் என சாட்சி பகர்ந்தன. மக்கள் அதிசயப்பட்டனர். அதிர்ச்சியடைந்தவர்களாக அரசனை சந்தித்தனர். தாம் கண்டதை, செவிமடுத்ததை ஆச்சரியத்துடன் அரசனிடம் எத்திவைத்தனர்.


உடனடியாக அரசன் அச்சிறுவனை அழைத்து வருமாறு பணித்தான். தனது அரச சபையில் அமைச்சராக அமரச் செய்தான். அச்சிறுவன் நாற்பது ஆண்டு காலங்களாக மக்கள் விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பை நிறைவேற்றினான்.

இந்நிகழ்வை இமாம் இப்னு அபீ ஷைபா, இமாம் சுயூதி, இமாம் அஹ்மத் ஆகியோர் அறிவிப்புச் செய்கின்றனர்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




عَنْ ابْنِ عَبَّاسٍ، رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لِرَجُلٍ وَهُوَ يَعِظُهُ: اغْتَنِمْ خَمْسًا قَبْلَ خَمْسٍ: شَبَابَكَ قَبْلَ هَرَمِكَ، وَصِحَّتَكَ قَبْلَ سَقَمِكَ ، وَغِنَاءَكَ قَبْلَ فَقْرِكَ، وَفَرَاغَكَ قَبْلَ شُغْلِكَ ، وَحَيَاتَكَ قَبْلَ مَوْتِكَ (النسائي)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு மனிதருக்கு உபதேசம் செய்ததாக இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ''உன்னிடம் ஐந்து விடயங்கள் வருவதற்கு முன்னர் ஐந்து அருட்கொடைகளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள் அவையாவன:

1. முதுமை வருமுன் இளமை
2. நோய் வருவதற்கு முன்னர் ஆரோக்கியம்
3. வறுமை வருவதற்கு முன்னர் செல்வந்த நிலை
4. வேலைப்பளு வருவதற்கு முன்னர் ஓய்வு நேரம்
5. மரணம் வருவதற்கு முன்னர் வாழ்வு'' (நஸாஈ)

நபியவர்கள் எடுத்துரைத்த இந்த உபதேசத்தின் ஊடாக மனித வாழ்க்கையில் இளமைப் பருவம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

இஸ்லாம் இளமையின் விலைமதிப்பற்ற தன்மையை எடுத்துரைப்பதுடன் இதனை நல்ல முறையில் பயன்படுத்த முன்வைக்கும் வழிகாட்டல்களும்ஆரோக்கியம்நிறைந்தவைஎன்பதனை அல்குர்ஆனும் அண்ணலாரின் முன்மாதிரிகளும் நிரூபிக்கின்றன.

இளமைப் பருவம் குயவனின் கையில் அகப்பட்ட மண்ணைப் போன்றது. சூழ்நிலைகளும், சுற்றுப் புறங்களும் சந்தர்ப்பங்களும் இளைஞர்களின் உள்ளங்களில் பெரும் மாற்றங்களை எளிதில் ஏற்படுத்தி விடுகின்றன. அதாவது தீய சக்திகளின் கவர்ச்சிகளுக்கு அவர்கள் ஆளாக நேரும் போது தீயவர்களாகவும், நன்மையின் அரவணைப்பில் ஆட்படும்போது மாபெரும் ஒழுக்க மாந்தர்களாகவும் உருவாகின்றனர்.

எனவேதான், இவ்விளமைப் பருவத்தைச் சீரிய பாதையில் இட்டுச் செல்ல வேண்டியது இளம் தலைமுறையினராகிய எமது தலையாயக் கடமையாகும். அந்த வகையில்.

இளமையை சீரிய முறையில் பாதுகாத்துக் கொள்ள இஸ்லாம் இறை தொடர்பை வலுப்படுத்துமாறு வழிகாட்டுகின்றது. மறுமை நாளில் மஹ்ஷர் மைதானத்தில் எந்தவித நிழலும் இல்லாத போது இத்தகையோருக்கு அல்லாஹ் தனது அர்ஷின் நிழலை வழங்குகின்றான் என நபிகளார் கூறினார்கள்.

மேலும் நபி லுக்மான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தனது புதல்வனுக்கு இளமைப் பராயத்தில் செய்யவேண்டிய விடயங்கள் பற்றி எடுத்துரைத்தவை பற்றி அல்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். அவற்றுள் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன. நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், பொறுமையும் சகிப்புத் தன்மையும், நடத்தையில் மென்மை, பேச்சில் பணவு, தற்பெருமை மற்றும் கர்வம் இல்லாதிருத்தல்.

யாரெல்லாம் இவ்வுலகிலே இளமைப் பருவத்தை அனுபவிக்கிறார்களோ அவர்கள் அனைவரும் மறுமையில் இப்பருவத்தை கழித்த முறைமை தொடர்பானஅல்லாஹ்வின்கேள்விகளுக்கு தகுந்த பதிலளிப்பதற்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதனை பிறிதொரு நபிமொழி எடுத்துரைக்கின்றது.

மறுமை நாளில் ஓர் அடியான் நான்கு வினாக்களுக்கு விடையளிக்காத வரை அவனது பாதங்கள் இரண்டும் நகரமாட்டாது. உனது வாழ்வை எவ்வாறு கழித்தாய்? உன் வாலிபத்தை எதில் செலவு செய்தாய்? செல்வத்தை எவ்வாறு சம்பாதித்தாய்? எவ்வாறு செலவு செய்தாய்? கற்ற அதனை அறிவின் மூலம் என்ன செய்தாய்? என்பனவாகும். (தபறானி)

எனவே, மறுமையில் அல்லாஹ்வினால் கேட்கப்படுகின்ற இக்கேள்விகளுக்கு ஆரோக்கியமான பதில் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடு இளையவர்களாகிய நாம் எப்போதும் வாழ்வதோடு இளைஞர்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் நிறையவே காணப்படுகின்றன. அவற்றைத் தெரிந்து அதன்படி எமது இளமையைக் கழிக்க முயற்சிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்புகளை ஏற்றுக் கொள்ளல்

ஒருவாராக உஹத் போராட்டம் முடிவுக்கு வந்தது. உஹத் களத்திலே முஸ்லிம்களுக்கு பல்வேறு இழப்புகள் ஏற்பட்டன. இழப்புகள் ஏற்படுகின்ற போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அருமையான பாடத்தை அண்ணலார் எமக்குக் கற்றுத் தந்த ஒரு களமாக உஹதைக் காணலாம்.

உஹதிலே நபியவர்களின் சிறிய தந்தையும் இஸ்லாத்திற்காக முன்னின்று உழைத்தவர்களுள் ஒருவருமான ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மரணித்து விட்டார்கள்.

இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''ஹம்ஸா (ரழியல் லாஹு அன்ஹு) அவர்களுக்காக நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அழுததைப் போன்று வேறு யாருக்கும் அவர்கள் அழுததை நான் பார்க்கவில்லை.''

அப்போது நபியவர்கள் பொறுமை காத்தார்கள். உஹத் போராட்டத்திலே பல்வேறு இழப்புகளுக்கு மத்தியிலும் நபியவர்களுக்குக் கூட காயம் ஏற்பட்ட நிலைமையிலும் அவற்றை பொறுமையோடு எதிர்கொண்டார்கள். பொறுமை காத்தார்கள் என்பதற்காக இழப்பு அவர்களுக்கு கவலையை, மனவருத்தத்தை அளிக்கவில்லை என்பது அர்த்தமாகாது.


இழப்புக்களை தாங்க முடியாத போது அழுதார்கள். அவர்களது கண்கள் கண்ணீர் சிந்தின. அதனைத்தான் நாம் ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மரணித்த போது நபியவர்கள் அழுததை அவதானிக்க முடியும். ஆனால் அவர்களுக்கு ஏற்பட்ட துன்ப, துயரம் அவர்களை இறைவனின் பக்கம் நெருங்கவும் இறைவனிடம் இருகரமேந்தவுமே செய்தது. மாறாக, இழப்புக்களுக்காக யார் யாரையோ குறை சொல்லவோ, இப்படி நடந்திருந்தால் இழப்புக்கள் நடக்காமலிருக்குமே, ஏன்தான் எனக்கு இப்படி சோதனையோ என்ற அங்கலாய்ப்புக்களையோ, குறை கூறுவதையோ நபிகளார் செய்யவில்லை.

அப்போது நபியவர்கள் அனைவரையும் வரிசையாக நிற்கச் சொன்னார்கள். ஸஹாபிகளும் அவ்வாறே நிற்க, நபியவர்கள் இறைவனிடம் இருகரமேந்தினார்கள்.

அல்லாஹ்வே! புகலனைத்தும் உனக்கே உரித்தானது. நீ விரித்ததை மடக்குபவர் யாரும் இல்லை. நீ மடக்கியதை விரிப்பவர் யாரும் இல்லை. நீ வழிகேட்டில் விட்டவருக்கு நேர்வழி காட்டுபவர் யாரும் இல்லை. நீ நேர்வழி காட்டியவரை வழிகெடுப்பவர் யாருமில்லை. நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாரும் இல்லை. நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாரும் இல்லை. நீ நெருக்கமாக்கி வைத்ததை தூரமாக்கி வைப்பவர் யாருமில்லை. அல்லாஹ்வே! உனது வளங்கள், உனது கருணை, உனது கிருபை, உனது இரணம் ஆகிய வற்றை நீ எங்களுக்கு விசாலமாக வழங்குவாயாக!

அல்லாஹ்வே! நீங்காத, அகன்று போகாத, நிரந்தரமான அருட்கொடையை உன்னிடம் கேட்கிறேன். அல்லாஹ்வே! சிரமமான நேரத்தில் உதவியையும், பயத்தின் போது பாதுகாப்பையும் உன்னிடம் கேட்கிறேன். அல்லாஹ்வே! நீ எங்களுக்கு கொடுத்தவற்றின் தீங்கிலிருந்தும், நீ எங்களுக்கு கொடுக்காதவற்றின் தீங்கிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். அல்லாஹ்வே! எங்களுக்கு ஈமானை (இறை நம்பிக்கையை) பிரியமாக்கி வை. அதை எங்களது உள்ளங்களில் அலங்கரித்து வை. இறை நிராகரிப்பு, உனது கட்டளைக்கு மாறுசெய்வது, உனக்குக் கட்டுப்படாமல் விலகிப்போவது ஆகியவற்றை எங்களுக்கு வெறுப்பாக்கி விடு. எங்களைப் பகுத்தறிவாளர்களில் ஆக்கிவிடு. அல்லாஹ்வே! எங்களை முஸ்லிம்களாக மரணிக்க வை! முஸ்லிம்களாக எங்களைவாழச்செய்! நஷ்டமடையாதவர்களாக, சோதனைக்குள்ளாகாதவர்களாக எங்களை நல்லோர்களுடன் சேர்த்து வை! அல்லாஹ்வே! உனது தூதர்களைப் பொய்யாக்கி, உனது வழியிலிருந்து தடுக்கும் நிராகரிப்பாளர்களை நீ அழித்துவிடு! அவர்கள் மீது உனது தண்டனையையும் வேதனையையும் இறக்குவாயாக! அல்லாஹ்வே! வேதம் கொடுக்கப்பட்டவர்களில் இருக்கும் நிராகரிப்பாளர்களை நீ அழித்துவிடு! உண்மையான இறைவனே! (முஸ்னத் அஹ்மது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk

## கிறிஸ்மஸ் தீவின்

# சிவப்பு நண்டுகள்

**கிறிஸ்மஸ் தீவு** (Christmas Island) என்பது இந்து சமுத்திரத்தில் அவுஸ்திரேலியாவுக்கு சற்றுத் தொலைவில் உள்ள ஒரு குட்டித் தீவாகும். சுமார். 135 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இத் தீவின் சனத்தொகை 2000 இற்கும் குறைவாகும். மொத்த நிலப்பரப்பில் 88 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை கிறிஸ்மஸ் தீவு, தேசிய பூங்காவாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தீவின் மிகப் பிரதானமான விசேட அம்சம் அங்கு வாழும் கோடிக்கணக்கான ஒரு வகை சிவப்பு நண்டுகள்தான். இதனால் இன்று இத்தீவு சிறந்ததொரு சுற்றுலாத் தளமாக மாறியுள்ளது.

17 JAN 2014

கிறிஸ்மஸ் தீவில் அண்ணளவாக 45 கோடி சிவப்பு நண்டுகள் இருப்பதாகவும் அதிலும் 14 வேறுபட்ட இனங்கள் இருப்பதாகவும் அவுஸ்திரேலிய தேசியபூங்காப் பாதுகாப்பு மையம் மதிப்பிட்டு தகவல் வெளியிட்டுள்ளது. இவை தோற்றத்தில் சிவப்பு நிறத்தில் உள்ளதால் ஏனைய நண்டுகளை விடவும் மிக அழகாகக் காட்சியளிக்கின்றன. அழகுறக் காட்சியளித்தாலும் அவற்றின் உடலமைப்பு எமக்கு கொஞ்சம் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்பு நண்டுகளின் உடலமைப்பு

இரு பக்கமும் நன்நான்கு கால்களென மொத்தம் எட்டு கால்களையும் முன் பகுதியில் கால்களை விடவும் பெரிய இரண்டு பிடிப்பான்களையும் கொண்டுள்ளன. இப்பிடிப்பான்களை அவை கைகளாகப் பயன்படுத்துகின்றன. இதில் கத்தரி போன்று சிறிதான முட்கள் காணப்படுகின்றன. இப்பிடிப்பான்களால் அவை இரையைப் பற்றி கிழித்து உண்கின்றன. அவற்றின் வாயின் இருபுறமும் சிறிதாக இரு உணர்கொம்புகள் காணப்படும். வாய் சிறிதாக இருக்கும். பொதுவாகவே நண்டுகளுக்கு தலை, கழுத்து எல்லாம் வட்ட வடிவிலான ஒரு உடல் பகுதியில்தான் இருக்கும். நண்டுகள் எப்போதும் இடம் வலமாகவே பயணிக்கும். ஆனால் அவற்றின் பார்வை முன்னோக்கி இருந்தாலும் 180 பாகையில் அவை தம் கண்களை சுழற்றிப் பார்க்கும்.

## வாழ்க்கை வட்டம்

இத்தீவில் உள்ள சிவப்பு நண்டுகளை ஒக்டோபர், நவம்பர் மாதங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில் பார்ப்பது அரிதாகவே இருக்கும். ஒக்டோபர், நவம்பர் மாதம் ஆகும்பொழுது கோடிக் கணக்கான நண்டுகள் திடீரென அடர்ந்த காட்டுப் பகுதிகளில் இருந்து கடற்கரையை நோக்கி வெளியேற ஆரம்பிக்கின்றன. இது ஒவ்வொரு வருடமும் தொடராக நடைபெற்று வரும் ஒரு விடயம். இவை ஒவ்வொரு ஆண்டும் தங்களது இனப்பெருக்க காலத்தில் காடுகளில் இருந்து கடற்கரை நோக்கி புலம் பெயர்கின்றன. பாதைகள், நகரங்கள், வீடுகள், கட்டிடங்கள் என எல்லாப் பகுதிகளூடாகவும் இவை நுழைந்து கடற்திசைக்கு விரைகின்றன. இக்காலங்களில் எங்கு பார்த்தாலும் சிவப்பு நண்டுகளைக் காணலாம். இவற்றின் பயணம் மிக அழகாக இருக்கும்.

இவற்றால் மனிதர்களுக்கு உயிர்த் தீங்குகள் எதுவும் ஏற்படுவதில்லை. என்றாலும் இவை ஒரேயடியாக மனிதர்கள் சஞ்சரிக்கும் பகுதிகளுக்குப் படையெடுப்பதால் போக்குவரத்து, விவசாயம் என்பன பாதிக்கப்படுகின்றன. வாகனங்களின் பயணத்தால் இவை அதிகமாக இறப்புக்குள்ளாவதால் தேசிய பூங்கா அமைப்பானது சிவப்பு நண்டுகள் அதிகமாகப் பயணிக்கும் பகுதிகளில் வாகனங்கள் செழுத்துவதைத் தடை செய்கின்றது. மேலும் அவற்றுக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாதென்பதற்காக பாதைகளுக்குக் கீழால் சுரங்கங்களையும் அவற்றுக்கென விஷேடமான பாலங்களையும் பாதைகளைச் சுற்றி தடுப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. சாரை சாரையாக சிவப்பு நண்டுகள் வெள்ளம் போல் வரும் காட்சியைப் பார்க்க இக்காலங்களில் அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் செல்கின்றனர்.

## இனப்பெருக்கம்

இவ்வாறு கடற்கரையைச் சென்றடையும் நண்டுகள் அங்கு 8 அல்லது 10 வாரங்கள் தங்குகின்றன. தமக்கான உணவையும் அவை அங்கு பெற்றுக்கொள்கின்றன. அத்தோடு ஆண் நண்டுகளும் பெண் நண்டுகளும் இணைந்து இனப்பெருக்கம் செய்கின்றன. அதன்பின் சில வாரங்களில் உருவாகும் முட்டைகளை பெண் நண்டுகள் அவற்றின் முன் கைகள் இரண்டையும் மேலே உயர்த்தியவாறு கடலை நோக்கி நின்றுகொண்டு தம்மை வந்து தாக்கும் அலைகளில் முட்டைகளை விட்டுவிடுகின்றன. அவை கடற்கரையில் உள்ள பாறைகளில் ஒட்டிக்கொண்டு சில நாட்களின் பின்னர் பொறித்த குஞ்சு நண்டுகள் வெளியேறுகின்றன.

சிவப்பு நண்டுகளின் இனப் பெருக்கத்திற்கும் முட்டையிலிருந்து குஞ்சுகள் வருவதற்கும் ஏதுவான இடம் கடற்கரை என்பதையும் பொருத்தமான காலம் நவம்பர், டிசம்பர் காலங்கள்தான் என்பதையும் சரியாக அறிந்து அவை செயலாற்றுகின்றன. இந்த அற்புத அறிவை அவற்றுக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.

முட்டை பொரித்து குஞ்சு நண்டுகள் வெளியே வந்ததும் அவை செம்மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஓரிரு நாட்களில் மீண்டும் குஞ்சுகளுடன் பெரிய நண்டுகளும் டிசம்பர் முடிவுற்று ஜனவரி ஆரம்பப் பகுதிகளில் காட்டுப் பகுதியை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கும். இதற்கிடையில் ஆயிரக்கணக்கான நண்டுகள் புகையிரதம், மோட்டார் வாகனங்கள் என்பவற்றுக்குள் நசுங்கியும் ஒரு வகை எறும்பு, மற்றும் பறவைகளுக்கு உணவாகியும் இறந்துவிடும். இவ்விறப்பானது அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட சமநிலைத் தன்மையைப் பேணுகின்றது. ஒரு பரம்பரை இறந்து புதிய பரம்பரைக்கு இடமளிக்கும் அற்புதச் செயல் இங்கு நிகழ்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடலில் கிடைத்தவை



- உலகப் புகழ் பெற்ற மோனாலிஸா ஓவியத்திற்கு கண் இமை இல்லை.



- 500 கிரேம் தேன் எடுக்க தேனீக்கள் 2 மில்லியனுக்கு மேற்பட்ட பூக்களிலிருந்து தேன் சேகரிக்க வேண்டும்.
- பூமி சூரியனைச் சுற்றிவரும் வேகம் காரணமாக சூரிய கிரகணங்கள் 7 நிமிடங்கள் 58 செக்கன்களுக்கு மேல் தோன்றாது.



- இரண்டு வயதை அடையும் வரை சிங்கத்தால் கர்ச்சிக்க முடியாது.
- மின்னலில் இருந்து வரும் மின்சாரத்தைக் கொண்டு ஒரு மின் விளக்கினால் 100 வருடங்களுக்கு ஒளிதர முடியும்.




- மூளை இல்லாத மீன் இனம் நட்சத்திர மீனாகும்.
- கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு நெதர்லாந்து.
- ஒரு மணி நேரம் Head Phoneஐ அணிந்திருந்தால் காதிலுள்ள பற்றீரியாக்களின் எண்ணிக்கை 700 மடங்காக அதிகரிக்கும்.
- கைவிரல் அடையாளம் போன்று நாக்கு அடையாளமும் ஒருவருக்கொருவர் வேறுபட்டதாகும்.



- ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் வாழும் உயிரினம் ஈரிதழ் சிப்பி (Oyster).

இமாரா இம்தியாஸ்,
தரம் 11,
நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி,
சீனங்கோட்டை, பேருவலை.


# நாடுகளும் தலைநகரங்களும்



| நாடு | தலைநகரம் |
|---|---|
| அவுஸ்திரேலியா | கன்பெரா |
| கிரிபாடி | தரவா |
| சமோவா | ஏபியா |
| சாலமன் தீவுகள் | ஹொனியாரா |
| டோங்கோ | நுகு அலேஃபா |
| தூவலூ | ஃபுனாஃபுதி |
| நியூசிலாந்து | வெல்லிங்டன் |
| நௌரு | யாரென் நௌரு |
| பலாவ் | கோரோன் |
| பப்வா நியூகினியா | போர்ட்மோர்ஸ்பி |
| ஃபிஜி | சுவா |
| மார்ஷல் தீவுகள் | மஜுரோ |
| மைக்ரோனேஷியா | பாலிகிர் |
| வானாட்டு | விலா |

ஆமினா முபாரக், தரம் 11, நாவலப்பிட்டி

# விலங்குகளின் குட்டிகள்



| | |
|---|---|
| சுறா | - Cub |
| அணில் | - Pup (Kitten) |
| அரணை | - Cygnet |
| ஆடு | - Kid |
| ஆந்தை | - Owlet |
| ஆமை | - Hatching |
| ஒட்டகச்சிவிங்கி | - Calf |
| கங்காரு | - Joey |
| கரடி | - Cub (whelp) |
| கழுகு | - Eaglet |
| கழுதை | - Foal |
| காகம் | - Chick |
| காடை | - Chick |
| காண்டா மிருகம் | - Calf |



ஆலிப் அனம் மனார், அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச தினங்கள்

ஜனவரி 15 - உலக சமய தினம்
பெப்ரவரி 02 - சர்வதேச ஈரநில தினம்
மார்ச் 08 - சர்வதேச மகளிர் தினம்
மார்ச் 22 - உலக மக்கள் தினம்
மார்ச் 22 - குடிநீர் தினம்
மார்ச் 23 - உலக காலநிலை தினம்
ஏப்ரல் 02 - உலக சுகாதார தினம்
ஏப்ரல் 12 - விண்வெளிப் பிரயாணிகள் தினம்
ஏப்ரல் 22 - உலக பூமி தினம்

மே 01 - சர்வதேச தொழிலாளர் தினம்
மே 07 - சர்வதேச ஆஸ்மா தினம்
மே 08 - சர்வதேச தலசீமியா தினம்
மே 13 - சர்வதேச தாதியர் தினம்
மே 14 - சர்வதேச குடும்ப தினம்
மே 17 - சர்வதேச தொலைத்தொடர்பு தினம்
மே 18 - சர்வதேச திமிங்கில தினம்
மே 21 - சர்வதேச கலாசார தினம்
மே 22 - சர்வதேச உயிர்ப் பல்வகைமை தினம்

ஜூன் 05 - சர்வதேச சுற்றாடல் தினம்
ஜூன் 08 - சர்வதேச சமுத்திர தினம்
ஜூன் 20 - சர்வதேச அகதிகள் தினம்
ஜூன் 23 - சர்வதேச ஒலிம்பிக் தினம்
ஜூன் 26 - சர்வதேச இம்சைக்கு உட்பட்டவர்களின் தினம்
ஜூன் 27 - உலக நீரிழிவு தினம்
ஜூலை 07 - சர்வதேச தொல்பொருள் தினம்
ஜூலை 11 - சர்வதேச குடிசன தினம்

செப்டம்பர் 01 - அணிசேரா தினம்
செப்டம்பர் 03 - சர்வதேச வலது குறைந்தோர் தினம்
செப்டம்பர் 05 - உலக தொழிநுட்ப தினம்
செப்டம்பர் 07 - உலக கலைத் தினம்
செப்டம்பர் 16 - சர்வதேச ஓசோன் படல பாதுகாப்புத் தினம்
செப்டம்பர் 21 - உலக சமாதான தினம்
செப்டம்பர் 27 - உலக சுற்றுலாத் தினம்

ஒக்டோபர் 01 - உலக சிறுவர் தினம்
ஒக்டோபர் 01 - உலக முதியோர் தினம்
ஒக்டோபர் 03 - உலக மது ஒழிப்பு தினம்
ஒக்டோபர் 04 - சர்வதேச வன்செயலற்ற தினம்
ஒக்டோபர் 04 - சர்வதேச மிருக தினம்
ஒக்டோபர் 06 - சர்வதேச ஆசிரியர் தினம்
ஒக்டோபர் 06 - சர்வதேச குடியிருப்பு தினம்
ஒக்டோபர் 09 - சர்வதேச தபால் தினம்
ஒக்டோபர் 14 - சர்வதேச தரநிர்ணய தினம்
ஒக்டோபர் 15 - சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்
ஒக்டோபர் 16 - உலக உணவு தினம்
ஒக்டோபர் 24 - ஐக்கிய நாடுகள் தினம்
ஒக்டோபர் 31 - உலக சிக்கன தினம்

டிசம்பர் 01 - உலக எயிட்ஸ் தினம்
டிசம்பர் 10 - உலக மனித உரிமைகள் தினம்

எம்.கே.எப். நுஸ்கா
தரம்- 10
அ/ மனாருல் உலூம் ம.வி.
கம்பிரிகஸ்வெவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபித்தோழர்கள்

1. குரல்வளை நெறிக்கப்பட்ட போது இனிய கீதம் பாடியவர் - பிலால் இப்னு ரபாஹ் (ரழியல்லாஹு அன்ஹு)
2. சுவனத்தை அடைவதற்கென்றே பிறந்தவர் - அம்மார் பின் யாசீர் (ரழியல்லாஹு அன்ஹு)
3. தியாகச் செம்மல் - ஹப்பாப் பின் அறத் (ரழியல்லாஹு அன்ஹு)
4. இறைவனுடைய சிங்கம் - ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரழியல்லாஹு அன்ஹு)
5. நெஞ்சுறுதிமிக்கவர் - ஹுபைப் பின் அதீஸ் (ரழியல்லாஹு அன்ஹு)
6. அண்ணல் நபியின் அன்புத் தூதர் - முஸ்அப் பின் உமைர் (ரழியல்லாஹு அன்ஹு)
7. சுவர்க்கத்தின் சுதந்திரப் பறவை - ஜஃபர் பின் அபீதாலிப் (ரழியல்லாஹு அன்ஹு)
8. உண்மை தேடி உலகம் சுற்றியவர் - ஸல்மானுல் பாரிஸி (ரழியல்லாஹு அன்ஹு)

எம்.ஜே.எப். ஜெஸிரா, 4ம் வருடம், பாத்திமா ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி

## சோதனையின் வகைகள்



மாவீரன் பந்தய மைதானத்தில் சோதிக்கப்படுகிறான்.

சாந்தமுள்ளவன் சோதனை வேளையில் சோதிக்கப்படுகிறான்.

அமானிதம் பாதுகாப்பவன் ஏழையாகிவிடும் போது சோதிக்கப்படுகின்றான்.

பெண்மையின் அன்பு வறுமையின் போது சோதனைக்குள்ளாகின்றது.

ஒரு தோழன் இக்கட்டுக்குள்ளாகும் போது சோதிக்கப்படுகின்றான்.

நல்லிணக்கம் உள்ள மனிதன் கோபத்திற்கு உள்ளாகும்போது சோதிக்கப்படுகிறான்.

சிஹாமா பாயிஸ், முஸ்லிம் மகளிர் கல்லூரி
கொழும்பு



## பிள்ளைகளும் அவர்கள் வளரும் சூழலும்

எப்போதும் குறை காண்பவர்கள் உள்ள சூழலில் வளரும் பிள்ளை ஏனையோரைத் தாழ்வாக நோக்கப் பயிலும்.

எப்போதும் கோபித்துக் கொள்வோர் உள்ள சூழலில் வளரும் பிள்ளை ஏனையோருடன் சண்டை சச்சரவிடப் பயிலும்.

எப்போதும் அவமானத்திற்கு ஆளாகும் பிள்ளை சமூகத்திற்கு முகங்கொடுக்க வெட்கப்படும்.

ஒருவரையொருவர் பொறாமையுடன் நோக்குபவர்கள் உள்ள சூழலில் வளரும் பிள்ளை ஏனையோரின் குறைகளை காணப்பயிலும்.

தான் செய்யும் நல்ல செயல்களை ஊக்குவிப்பவர்கள் உள்ள சூழலில் வளரும் பிள்ளை தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும்.

அடிக்கடி நன்றி, பாராட்டைப் பெறும் பிள்ளை ஏனையோரை மதிக்கக் கற்றுக் கொள்ளும்.


ஏனையோரின் கருத்தை செவிமடுப்பவர்கள் உள்ள சூழலில் வளரும் பிள்ளை பொறுமையாக இருக்கப் பயிலும்.

அயற்சூழலில் நியாயம் நிலவுவதைக் காணும் பிள்ளை நீதிகளை இனங்காணப் பயிலும்.

எஸ்.எம். ரம்ஸத்
இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழிற்சாலைகளும் அவை அமைந்துள்ள அமைவிடங்களும்

எம்.எச்.எம். ஹஸ்மின், தரம்- 11, மடிகே முஸ்லிம் மகா வித்தியாலயம், இப்பாகமுவ

| தொழிற்சாலை | அமைந்துள்ள இடம் |
|---|---|
| தேயிலை ஆராய்ச்சி நிலையம் | தலவாக்கலை |
| தெங்கு ஆராய்ச்சி நிலையம் | லுணுவில |
| இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | அகலவத்தை |
| கனிப்பொருள் தொழிற்சாலை | புல்மோட்டை |
| ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை | ஜின்தோடை |
| உருக்கிரும்புத் தொழிற்சாலை | ஒருவெல |
| டயர் தொழிற்சாலை | களனி |
| சீமேந்துத் தொழிற்சாலை | காங்கேசன்துறை, காலி, புத்தளம் |
| மட்பாண்டத் தொழிற்சாலை | பிலியந்தலை |
| காகித ஆலை | வாழைச்சேனை, எம்பிலிப்பிடிய |
| புடவை ஆலைகள் | பூகொடை, வெயாங்கொடை, துல்கிரிய |
| பால் பதனிடும் தொழிற்சாலை | அம்பேவல |
| எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் | சப்புகஸ்கந்த |
| ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம் | நாவின்ன |

# வாயுக்கள்



வளியில் அதிகளவு காணப்படும் வாயு - நைதரசன்

வளியில் சாதாரணமாக இல்லாத வாயு - ஆகன்

சிரிப்பூட்டும் வாயு - நைட்ரஸ் ஒக்சைட்

வளியை மாசுபடுத்தாத பயனுள்ள வாயு - ஒட்சிசன்

மாட்டுச் சாணத்திலிருந்து வெளியேறும் வாயு - மெதேன்

மோட்டார் வாகனங்கள் வெளியிடும் நச்சுத் தன்மையான வாயு - காபன் மொனோ ஒக்சைட்

தீயணைக்கும் கருவிகளில் காணப்படும் வாயு - காபனீரொட்சைட்

ஜே. முஹம்மத் ருஸ்தி, அ/ நெல்லியகம மு.ம.வி., பலாகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Assalamualaikum dear friends

Do you know ? We've got 365 fresh new days from Allah for one year, to advance in studies, expand knowledge, progress in life and earn good merits. Are we ready to accomplish them? At the end of this year, we must be able to shout **Hoooray.....I am grown up this year...............**

This time I introduce hadeeth of the month, so that you can learn Islamic vocabulary in English. And also we'll be exploring the world with our friends all over the island.


Nihla, the little ostrich shares her experience with us.

"I was born in a nest, along with many siblings. We came out of our big eggs. Mom says we are the biggest birds on earth. But I guess we can't fly. Dad and mom can run in the speed of 70km/h. I too , should practice to run very fast. We eat stones to digest our food. I hope I will grow up soon and become a good ostrich like my mom"

Did you hear what Nihlasaid ? Find more on ostriches, you will come across wonderful facts.

What are the other flightless birds?

1. Kiwi
2. Rhea
3. Cassowary
4. Penguin



Penguins , can swim. Kiwi,,, yes that same picture you find on your shoe polish bottle, is from New Zealand. It lays a very BIG egg.

So friends, next time you visit to the zoological garden in Dehiwala, do explore about these flightless birds !!

You can try out some new hobbies related to birds.

1. Bird watching
2. Collecting feathers
3. Making sketches of birds

I have a collection of bird feathers. Green shaded ones of parrots, bluish ones of king fishers , spotted ones of pigeons... and a number of others. You can take a scrap book and paste the feathers with a note below each. Try this out!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hadeeth of the month**

**"Actions are judged by intensions"**


(Bukhari)



# My family

I have a small family with my father mother brother and myself in it. We are Sri Lankans. And we live in Gampola. My father is a business man and my mother is a house wife. They are kind parents. My brother and I are schooling. We live a happy life. I love my family.

M.M.M.Manaan, Grade-4
Benhill College, Gampola



## Sri Lanka

Sri Lanka is my nation
Surrounded by Indian ocean
It's a small island
With crystal blue ocean
It has sandy beach
With lots of oysters
(I love my country very much)

**M.J.S.Fathima Shakeefa**
P/Fathima Muslim Girls College
Puttalam
Grad-08G(English Medium)

## Complaints

I complained
I had no shoes
Until I saw a man
Who had no feet

I complained
I had no light
Until I saw a man
Who had no sight

I complained
I had no wealth
Until I saw people
Who had no health

Then I said to myself
"Why should I complain?"
Because Allah has given
So much to me


A.A.M.Azhar, Grade-8
Highline International School
Muruthagahamulla



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sour or sweet

Once upon a time, there was a fruit seller. He sat beside the road , selling his fruits. One day , an old lady who passed by asked him whether the fruits for sale were sour. The seller thought that the old woman would not eat sour oranges. Hence , he replied immediately, "No, this orange is sweet. How much do you want dear lady?"



The old lady replied saying "No , not a single one. I want to buy sour oranges, because my son's wife is pregnant and she craves for sour food"

Thus the seller lost his deal. But he intended to lie carefully next time.

After two days, a pregnant woman came to the fruit seller and asked him; "Is this orange sour?" Since the lady who came this time was a pregnant lady, he remembered the lesson he learnt the other day form the old lady. Therefore , he replied saying,"Yes", because he wanted to sell the oranges to her..Then he asked his usual question "How much do you want?"

She replied him. "I don't want anything , because my husband's mother sent me here to buy her some sweet oranges as you told her two days ago that there were sweet oranges with you. But …never mind"

Then , the seller understood that this pregnant lady in front of him was the wife of that old lady's son. And also at the same time ,he came to realize that his lie, cheating and fraud betrayed him at the end although he tried to win in his transactions by deception.

Allah, the Almighty says in the Holy Quran as follows ***"But the evil plot encompasses only him who makes it"(Chapter 35:Verse 43)***

**Isthikeen Nasheed Saifi**
Adalachenai

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்வில் اللغة العربية

# அரபு மொழி

தொடர்:



அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

*01.* சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.

١. الطُّلاَّبُ ذَهَبُوْا ( )

٢. البَيْتُ جَمِيْلٌ ( )

٣. نَحْنُ نَدْرُسُ ( )

٤. هَؤُلاَءِ أَقْلاَمٌ ( )

٥. هَذَا رَجُلٌ ( )

*02.* பின்வரும் சொற்களுக்குரிய பன்மைகளை எழுதுக.

١. الْمُسْلِمُ ........................................

٢. الْبَيْتُ ........................................

٣. الْكِتَابُ ........................................

٤. الرَّجُلُ ........................................

*03.* பகுதி ''அ'' இற்குப் பொருத்தமானதை பகுதி ''ஆ'' இலிருந்து தெரிவு செய்து இணைக்குக.

| (அ) | (ஆ) |
|---|---|
| ١. هَذِهِ | قَلَمَانِ |
| ٢. تَانِكَ | مُسْلِمُوْنَ |
| ٣. ذَانِكَ | رَجُلاَنِ |
| ٤. أُلَئِكَ | جَامِعَتَانِ |
| ٥. هَذَانِ | رِسَالَةٌ |

*04.* பொருத்தமான சுட்டுப் பெயர்களைக் கொண்டு ( أَسْمَاءُ الإِشَارَةِ ) இடைவெளி நிரப்புக.

١. ........................................ طُلاَّبٌ

٢. ........................................ مُسْلِمَاتٌ

٣. ........................................ رَجُلاَنِ

٤. ........................................ كِتَابٌ

٥. ........................................ جَزِيْرَةٌ

*05.* பின்வரும் பிரதிப் பெயர்களுக்குப் பொருத்தமான இறந்தகால வினைகளை எழுதுக.

١. هُوَ ........................................

٢. هُمَا ........................................

٣. هُمْ ........................................

٤. أَنَا ........................................

٥. أَنْتَ ........................................

٦. أَنْتُمَا ........................................

٧. أَنْتِ ........................................

٨. أَنْتُمْ ........................................

٩. أَنْتُنَّ ........................................

١٠. نَحْنُ ........................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மிகச்சரியான சொல்லின் கீழ் கோடிடுக.

١. ............ صُوْرَةُ أُسْرَتِي (هَذَا / هَذِهِ)

٢. هَلْ هَذِهِ............ ؟ (شَجَرَةٌ / مِعْطَفٌ)

٣. هُوَ......................... ( يَقْرَأُ / تَقْرَأُ )

٤. هَلْ أَنْتَ ...............؟ (طَالِبٌ / طَالِبَةٌ )

٥. هَذَا ...................... (أَخِيْ / أُخْتِيْ )

07. பின்வரும் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

يَتِيْمٌ ..........................................

مُمَرِّضَةٌ ..........................................

مَكْتَبَةٌ ..........................................

صَدِيْقٌ ..........................................

كُرَةٌ ..........................................

08. பின்வரும் சொற்களுடன் பிரதிப் பெயர்களை இணைத்து எழுதுக.

١. كِتَابٌ + أَنَا = كِتَابِيْ

٢. قَلَمٌ + أَنْتَ = ..........................

٣. بَيْتٌ +هُوَ = ..........................

٤. مَسْجِدٌ +هُمْ = ..........................

٥. حَقِيْبَةٌ +أَنَا = ..........................

٦. مِفْتَاحٌ +نَحْنُ = ..........................

09. பின்வரும் இலக்கங்களை அறபியில் எழுதுக.

1. பத்து

2. இருபத்தைந்து


3. முப்பத்து நான்கு

4. ஐம்பத்து மூன்று

5. தொண்ணூற்று ஒன்பது


10. பின்வரும் கடிகார நேரங்களை அறபியில் எழுதுக.

١.




............................

٢.




............................

٣.




............................

٤.



............................

٥.



............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

# வரலாறு



கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## தரம் 10

1. i. ஒரு நாட்டின் வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
   ii. வரலாற்றுக்கு கூறப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் 2 தருக. (4 புள்ளிகள்)
   iii. தொல்பொருள் மூலாதாரங்களை வகைப்படுத்தி, அவற்றுள் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)
   iv. வரலாற்றைக் கற்பதால் ஏற்படும் நன்மைகள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

விடைகள்

i. 1. அந்நாட்டின் புவியியல் அம்சங்கள்
   2. நாட்டிலுள்ள பொருளாதார நிலமைகள்
   3. அந்த நாட்டை ஆட்சி செய்பவர்களின் கொள்கைகள்.

ii. ''வரலாறு என்பது ஒரு தனித்த பொருளல்ல மாறாக எல்லாவிதப் பொருட்கள் பற்றிய இயல்புகளும் துறைகளும் வாழுகின்ற ஒரு மாளிகை.'' - ஜீ.எம். திரவிலியன்

''புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தைக் கற்பதுதான் வரலாறு.'' - ஸ்டுவர்ட் பிகொட்

iii. 1. கல்வெட்டுக்கள், நாணயங்கள், சிதைவுகள்

**கல்வெட்டுக்கள்**

கல்வெட்டுக்கள் குகைக் கல்வெட்டு, குன்றுக் கல்வெட்டு, சுவர்க் கல்வெட்டு, தூண் கல்வெட்டு என நான்கு வகைப்படும். கல்வெட்டுக்களிலிருந்து நாம் பல பயன்களைப் பெறுகின்றோம். மொழிகளின் வளர்ச்சியை அறிய கல்வெட்டுக்கள் உதவுகின்றன. உதாரணமாக ரிட்டிகல, சித்துல்பவ்வ முதலிய கல்வெட்டுக்கள் பிராமிய மொழியில் எழுதப்பட்டுள்ளன. இம்மொழியிலிருந்தே சிங்கள மொழி வளர்ச்சியடைந்தது.

அரசியல் வரலாற்றை அறியவும் கல்வெட்டுக்கள் உதவுகின்றன. உதாரணமாக, நிசங்கமல்லன் கல்பொத்த கல்வெட்டை அமைத்தான். இது 8 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலமும் கொண்டது. இதில் மன்னன் தனது பரம்பரை பற்றியும் பௌத்த சமயத்திற்கு தான் ஆற்றிய தொண்டுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளான்.

iv. **சூழலை நேசிக்கும் பண்பு வளரும்**

வரலாற்றை நாம் படிப்பதன் மூலம் எமது முன்னோர்கள் சூழலை நேசித்தது போல நாமும் சூழலை நேசிப்பவர்களாக மாறுவோம். எமது முன்னோர்கள் இயற்கையை அழிக்காமலே தமது தேவைகளைப் பூர்த்திசெய்தார்கள். இயற்கையாக இருந்த எச்சக்குன்றுகளின் சுவடுகளை இணைத்து அணை கட்டினார்கள். இயற்கையாக அமைந்த நிலச்சாய்வைப் பயன்படுத்தி ஓரிடத்தில் இருந்த நீரை இன்னோர் இடத்திற்குக் கொண்டு சென்றார்கள். உதாரணமாக தாதுசேனன் கலா வாவியில் இருந்த நீரை திசா வாவிக்குக் கொண்டு செல்வதற்காக யோதக்கால் வாயை அமைத்தான். இது நிலத்தின் மென்சாய்வை நன்கு கணித்துக் கட்டப்பட்டது. ஆனால் இன்றைய மனிதன் தனது தேவையை நிறைவேற்ற இயற்கையை அழிக்கின்றான்.

**வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்**

மனித வாழ்வு மிகவும் சுருங்கியது. மனிதன் தனது வாழ்க்கையிலே பல தீர்மானங்களை எடுக்க வேண்டி உள்ளான். மனிதன் சரியான தீர்மானங்களை எடுத்து வாழ்க்கையில் வெற்றிபெற வரலாறு உதவும். வரலாறு பாடத்தில் பல அரசர்களின் வாழ்க்கை அம்சங்களை நாம் கற்கின்றோம். அவர்கள் வெற்றியடைந்தமைக்கான காரணங்களையும், தோல்வியடைந்தமைக்கான காரணங்களையும் வரலாறு எமக்கு எடுத்துரைக்கின்றது. வாழ்க்கையில் வெற்றிபெற வரலாற்றுச் சம்பவங்கள் எமக்கு படிப்பினைகளைத் தருகின்றன. உதாரணமாக, 1803இல் ஆளுநர் நோத் திட்டமிடாது கண்டி மீது படையெடுத்தார். தோல்வி அவருக்குக் கிடைத்தது. ஆனால் 1815இல் ஆளுநர் பிறவுண்றிக் நன்கு திட்டமிட்டுப் படையெடுத்தமையால் வெற்றி பெற்றார். எச்செயலையும் நன்கு திட்டமிட்டுச் செய்தால் வெற்றி பெறலாம் என்ற படிப்பினையை இதன் வாயிலாக எமக்குக் கிடைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. i. பின்வரும் வரலாற்றுச் சம்பவங்கள் நிகழ்ந்த ஆண்டுகளை அதே ஒழுங்கில் தருக.
அ. இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டமை
ஆ. இரட்டை ஆட்சி முடிவுக்கு வந்த ஆண்டு
இ. ஆங்கிலேயருக்கு எதிராக கண்டி மக்கள் மேற்கொண்ட முதலாவது சுதந்திரக் கிளர்ச்சி
ii. 1797இல் நடந்த கரையோரக் கிளர்ச்சிக்கான 4 காரணங்களைத் தருக.
iii. ஆங்கிலேயரால் கண்டி கைப்பற்றப்பட்டமைக்கான 2 காரணங்களை விளக்குக.
iv. கண்டி மக்களின் முதலாவது கிளர்ச்சிக்கான காரணங்கள் மூன்றை விளக்குக.

விடைகள்

i. அ. 1802
ஆ. 1802
இ. 1818

ii. 1. வரி வசூலிப்பதற்காக சென்னையிலிருந்து அவுமில்தார் என்னும் அலுவலர்கள் வரவழைக்கப்பட்டமை.
2. புதிய வரிகள் விதிக்கப்பட்டமை.
3. பொருட்களுக்குப் பதிலாக பணமே வரியாக அறவிடப்பட்டமை.
4. ஏல விற்பனை மூலம் வரி அறவிடப்பட்டமை.

**iii. திட்டமிட்ட படையெடுப்பு**

1815இல் ஆளுநர் பிறவுண்றிக் கண்டியைக் கைப்பற்றியமைக்கு அவரது திட்டமிடலே காரணமாகும். அவர் மலைநாட்டின் காலநிலை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டார். கண்டி அரசனின் படைப் பலம், அவன் யுத்த காலத்தில் ஒளிந்துகொள்ளும் மறைவிடங்கள், கண்டி வீரர்களின் யுத்த முறைகள் பற்றிய தகவல்களை ஆளுநர் பெற்றுக்கொண்டார். இவ்வாறு பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலேயே அவர் தனது படையெடுப்பை மேற்கொண்டார். மழைகாலத்தில் வீரர்களுக்குத் தேவையான உணவுகளையும் மருந்துகளையும் எவ்வாறு வழங்குவது என்பதனையும் அவர் தீர்மானித்துக் கொண்டார். மறுபுறம் ஜோன் டொயிலி மூலம் மன்னனை மதுவுக்கு அடிமையாக்கினார். நீண்ட காலமாக தனது சுதந்திரத்தைப் பேணிவந்த கண்டி இராச்சியம் தன் சுதந்திரத்தை இழந்தமைக்கு ஆளுநர் பிறவுண்றிக் மேற்கொண்ட திட்டமிட்ட படையெடுப்பே காரணமாகும்.

**மன்னனின் கொடூர நடவடிக்கைகள்**

கண்டி மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் கொடுமையான நடவடிக்கைகள் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. 1803ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர் கைப்பற்ற முடியாமைக்குக் காரணம், பொதுமக்களும் பிரதானிகளும் பிக்குகளும் கண்டி மன்னனுக்கு ஆதரவாக இருந்தமையாகும். ஆனால் 1815இல் கண்டியை ஆட்சி செய்த ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் இம்மூன்று தரப்பினரதும் எதிர்ப்பைச் சம்பாதித்தான். பிலிமத்தலாவ என்ற பிரதானிக்கு 1811இல் மரணதண்டனை வழங்கினான். 1814இல் எகலப்பொலவிற்கு உதவியமைக்காக 47 பேருக்கு மரணதண்டனை வழங்கினான். இவ்வாறான மன்னனின் கொடூரமான செயல்கள் மக்களிடத்திலும் ஏனையோரிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தின.

**iv. பொதுமக்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் அதிருப்தியடைந்தமை.**

ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றியதும் கண்டி மக்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டன. இச்சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக ஆங்கிலேயர் கண்டி பிரதானிகளுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்கள். இந்த ஒப்பந்தம் 1815 மார்ச் 2ஆம் திகதி கண்டி அரச சபையில் இடம்பெற்றது. இந்த ஒப்பந்தத்தில் 12 வாசகங்கள் இடம்பெற்றன. அதில் 4வது வாசகம் ''கண்டி மக்களின் உரிமைகளும் வரப்பிரசாதங்களும் பாதுகாக்கப்படும்'' என்று கூறுகின்றது. ஆனால் ஆங்கிலேயர் நடைமுறையில் கண்டி மக்களின் உரிமைகளை மதிக்கவில்லை. அவர்களது சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. இதன் காரணமாக கண்டி மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

**பிரதானிகள் அதிருப்தி அடைந்தமை**

ஆங்கில ஆட்சியில் அதிருப்தி அடைந்த கண்டிப் பிரதானிகள், 1818இல் நடந்த கிளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தனர். ஆங்கிலேயர் கண்டி மன்னனைத் தோற்கடித்து ஆட்சிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை தம்மிடம் வழங்குவார்கள் என்று பிரதானிகள் எதிர்பார்த்திருந்தனர் ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. மாறாக ஆங்கிலேயர் பிரதானிகளை புறக்கணித்தார்கள். ஆங்கில அதிகாரிகளுக்கே அதிக சலுகைகள் வழங்கப்பட்டன. அரசர்கள் காலத்தில் சிற்றரசுகள் போல விளங்கிய பிரதானிகள் ஆங்கில ஆட்சியில் பல்வேறு அவமானங் களுக்கு உட்படுத்தப்பட்டனர். பிரதானிகளும் வரிகட்ட வேண்டும் என்று ஆங்கில அரசு அறிவித்தது. இதனால் எகலப்பொல முதலிய பிரதா னிகள் இக்கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தார்கள்.

**பிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை**

கண்டி அரசர்கள் காலத்தில் பௌத்த பிக்குகள்மிகஉயர்ந்தஇடத்தில்இருந்தார்கள்.அரசர்கள் பிக்குகளுக்கு உயர்ந்த கௌரவத்தையும், உதவிகளையும் வழங்கினார்கள். பௌத்த சாசனத்தை பாதுகாப்பதை தமது பிரதான கடமையாகக் கருதினார்கள். கண்டி ஒப்பந்தத்தின் 5ம் வாசகம் பௌத்த சாசனம் பாதுகாக்கப்படும் என்று கூறுகிறது. ஆனால் நடைமுறையில் ஆங்கிலேயர் பௌத்த விகாரைகளை விட கிறிஸ்தவ ஆலயங்களுக்கே அதிக சலுகைகளை வழங்கினார்கள். அவர்கள் ஆங்கில மொழிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியதால் சிங்கள மொழியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக பிக்குகள் 1818 கிளர்ச்சியில் கலந்து கொண்டு, ஆங்கில ஆட்சியாளர்களுக்கு எதிராக குரல் எழுப்பினார்கள்.

37ம் பக்கத் தொடர்...

2 ஆவது கண்காட்சி மூலம் 17000 யூரோக்களை 16 ஓவியங்கள் வரைந்ததன் மூலம் உழைத்தான்.

''கெய்ரான் உலகின் பிரபலமான ஓவியர்களான Picasso மற்றும் Giotto வின் அடிச்சுவட் டில் செல்கிறார் என Hill கூறுகின்றார். பிக்காசோ தனது 9 வயதில் 1 வது ஓவியக் கண்காட்சி நடத்தினார்.

''நான் ஓவியங்களை விரும்புகிறேன் ஏனெனில் இது சந்தோசத்தையும் உத்வேகத்தினையும் தருகிறது. நான் பார்க்க முடியாத பல இடங்கள் பற்றி என்னைச் சிந்திக்கச் செய்கிறது. நான் ஓவியங்களை வரைய வேண்டும். நான் பல்கலைக் கழகம் செல்வேன் என நினைக் கவில்லை. அப்படிச் சென்றால் கட்டடக்கலைத் துறையை (Architecture study)படிக்க வேண்டும். மேலும் நான் ஒரு எழுத்தாளராக வர வேண்டும்''

என கெய்ரான் ஊடக செவ்வியின் போது தெரிவித்தார்.

21ம் பக்கத் தொடர்..

இவரது மரணச் சடங்கில் பல நாட்டு தலைவர் கள், பிரதமர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு இறுதி மரியாதையை செலுத்தியதுடன் பல நாடுகள் தமது தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விட்டும், பல இரங்கல் நிகழ்வுகளை நடத்தியும் மண்டேலாவிற்கு பிரி யாவிடை செலுத்தினர்.

கொள்கைக்காக வாழ்ந்த மனிதன் சாதனை புரிந்து வரலாற்று நாயகனாக மாறுவான் என்ப தற்கு மண்டேலா சிறந்த முன்னுதாரணமாகும். தென்னாபிரிக்க மக்களின் தந்தையாக கருதப் படும் மண்டேலாவின் வாழ்வு பலருக்கு பாடங்களையும் படிப்பினைகளையும் புகட்டிக் கொண்டிருக்கின்றது.

## செவ்வாய் கிரகத்திற்கான இந்திய விண்கலம்

- இந்தியாவின் செவ்வாய்க் கிரகத்திற்கான முதலாவது விண்கலமானது PSLV றொக்கட் மூலம் 2013 நவம்பரில் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து ஏவப்பட்டது.
- இது மங்கள் யான் என அழைக்கப்படுகின்றது.
- இவ்விண்கலம் 299 நாட்கள் பயணித்து 2014 நவம்பரில் செவ்வாயை சென்றடையவுள்ளது.
- இவ்விண்கலம் செவ்வாயில் மனிதன் வாழ சாத்தியக்கூறு உள்ளதா, தண்ணீர், கனியவளம் உள்ளதா என்பன குறித்து ஆராயவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரலாற்று நாயகன்

# நெல்சன் மண்டேலா

**பிறக்கும்** போது யாரெனத் தெரியாது சாதாரணமாகப் பிறந்து பலகோடி மனித உள்ளங்களில் வாழ்ந்து, உலக மக்களின் கண்ணீர் இரங்கலுடன் மண்ணறை சென்ற 21ஆம் நூற்றாண்டின் மாபெரும் மனிதரென்றால் அது நெல்சன் மண்டேலா வாகத்தான் இருக்கும்.

1918 ஜுலை 18இல் தென்னாபிரிக்காவின் கிழக்கு கேப் பிராந்தியத்தில் குனு எனும் பழங்குடியினர் வாழும் கிராமத்தில் பழங்குடி அரச குடும்பத்தில் ஜனனமான மண்டேலாவின் முழுப் பெயர் ''ரோபிசலா மண்டேலா'' என்ப தாகும். சிறுவயதில் குத்துச் சண்டை வீரராக இருந்த இவர் அவரது குடும்பத் திலிருந்து பாடசாலைக்கு சென்ற முதல் நபராக கருதப்படுகிறார். மண்டேலா என்ற பெயர் இவரது ஆசிரியரால் பாடசாலைக்குச் சென்ற முதல் நாளில் சூட் டப்பட்டதாகும்.

கறுப்பின மக்கள் என்றாலே அடிமைகளாகவும், மனிதர்களற்ற ஜடங்களா கவும் பார்க்கப்பட்ட தென்னாபிரிக்க வெள்ளை அரசின் ஆட்சியை இவரது பிறப்பு ஆட்டங்காணச் செய்தது. கறுப்பின மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறை யைக் கண்டு மனம் வெதும்பிய மண்டேலா 1939 தனது 21வது வயதில் கறுப் பின மக்களின் அடக்குமுறைகள் பற்றி மக்களை விளிப்பூட்டினார். ஆடு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு மேய்த்துக் கொண்டு கல்வியை தொடர்ந்த இவர் 1941இல் ஜொஹன்னஸ்பெர்க்கில் பகுதி நேர சட்டக் கல்வியைப் பயின்றார். தங்கச் சுரங்க பாதுகாப்பு அதிகாரியாகவும், தோட்ட முகவரா கவும் பணியாற்றிய இவர், ''எவெலின் நடோகா மாஸ்'' எனும் செவிலியப் பெண்ணைத் திரு மணம் செய்தார்.

1943இல் அவரது அரசியல் பிரவேசம் ஆபி ரிக்க தேசிய காங்கிரஸில் இணைந்ததன் மூலம் ஆரம்பித்தது. அதன்பின் தேசிய இளைஞர் காங் கிரஸை உருவாக்கினார். அரசியலின் அதீத ஈடு பாடு மனைவியுடன் கருத்து மோதலுக்கு வழி வகுத்தது. 1958இல் ''வின்னி மடிகிலேனா'' என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். அவர் மண்டே லாவின் போராட்டத்திற்கு உந்து சக்தியையும், உதவியையும் வழங்கியமை அவரது போராட்ட உணர்வுக்கு புத்துணர்வு அளித்தது. முதலாவது மனைவி மூலம் மூன்று பிள்ளைகளும் இரண்டா வது மனைவியின் மூலம் இரண்டு பிள்ளைகளும் கிடைக்கப் பெற்றனர்.

சாத்வீகப் போராட்டம் பொருத்தமற்றது என உணர்ந்த மண்டேலா 1961இல் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆயுதப் படைக்கு தலைவராக மாறி கொரில்லா பாணியில் அரசை தாக்கத் தொடங்கி னார். இதனால், தலைமறைவாக வாழ அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். என்றாலும், 1962இல் காவல் துறையினர் அவரை கைது செய்தனர். மரண தண்டனை தான் தனக்கு விதிக்கப்படும் என்று உணர்ந்த மண்டேலாவின் போராட்ட உணர்வும் துடிப்பும் அரசின் முன் மண்டியிடச் செய்யவில்லை. மரணித்தால் கொள்கைக்காக மரணிப்பதாக தன்னைக் கருதினார். என்றாலும், 1964இல் ஆயுள் தண்டனையே விதிக்கப்பட்டு ரோபன் தீவில் 27 வருட சிறையில் கடும் சித் திரவதையின் மத்தியில் சிக்கித் தவித்தாலும் கொள்கைப் பற்றும் போராட்ட உணர்வும் அவரின் நாடி, நாளங்களில் நனைந்திருந்தது.

1973இல் பிரான்ஸ்காய் மாநிலத்தில் மட்டும் மண்டேலா வசிப்பதாக இருந்தால் விடுதலை செய்வதாக அரசு அறிவித்தது. அதை மறுத்த மண் டேலா கறுப்பின மக்களுக்கு விடுதலை கிடைக் கும் வரை எனக்கு விடுதலை தேவையில்லை என தன்மானத்துடன் உரைத்தார்.

ஐ.நா. பொதுச்சபை அவரை விடுதலை செய்யக்கோரியதுடன்உலகம்முழுவதும்அவரது விடுதலைக் கோரிக்கைகள் தொடர்ந்தும் எழுந்த வண்ணமிருந்தன. 1988ல் கடுமையான காசநோய் அவரை மரண வாயிலுக்கு அழைத்துச் சென்ற தால் வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டார். மன்னிப் புக் கோரினால் விடுதலை செய்கின்றோம் என அரசு தெரிவிக்க ''முடியாது'' என அதிரடியாய் பதிலுரைத்தார். 1990.02.11 அவரது 71வது வய தில் விடுதலை செய்யப்பட்டார். அவரது விடு தலை உலம் முழுவதும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானதுடன், உலகத் தலைவர்கள் தமது வாழ்த்து மாலைகளால் அவரைச் சூடினர்.

சிறையில் இருக்கும் போதே நேரு சமாதான விருது இவருக்கு வழங்கப்பட்டது. அதே போன்று 1990இல் இந்திய அரசால் ''பாரத ரத்னா'' விருது அவரை வந்தடைந்ததுடன், 250க்கும் மேற்பட்ட விருதுகளின் சொந்தக்கார ரானார். 1993இல் அமைதிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டதுடன், 1994 மே 10இல் தென்னாபிரிக்காவின் அதிபராக பதவியேற்றதன் மூலம் தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப் பின ஜனாதிபதி என்ற பெருமை இவரை வந்த டைந்தது.

1998இல் ''கிரேகாமாசெல்'' என்பவரைத்திரு மணம் செய்தார். 2000இல் புரூண்டியில் நடை பெற்ற சிவில் யுத்தத்தின் அமைதித் தூதராக கடமையாற்றியதுடன், 2003இல் இருந்து எயிட்ஸ் விளிப்புணர்வு பிரச்சாரகராக செயற்பட்டார். 2004 ஜொஹன்னஸ் பேர்க்கின் உயர் விருதான ''நகரின் சுதந்திர விருது'' இவருக்கு வழங்கப்பட் டது. 2007இல் மூத்த உலக தலைவர்களுடன் ஒன்றிணைந்து முதியோர் இயக்கத்தை ஆரம்பித் தார். அதே ஆண்டு இங்கிலாந்தில் நாடாளுமன்ற சதுக்கத்தில் ஆபிரகாம் லிங்கன் அருகே இவரது வெண்கலச் சிற்பம் செதுக்கப்பட்டது.

2013 அடைந்த போது மரணத்தின் எட்டுக் கள் அண்மித்தன. 2013 ஜுலையில் நுரையீரல் தொற்றுநோய் அவரை தொற்றிக் கொண்டது. மருத்துவமனை அவரது வீடாக மாறியது. சிறிது காலத்தின் பின் வீடு திரும்பிய மண்டேலா 2013 டிசம்பர் 05ஆம் திகதி தனது 95வது வயதில் உலக மக்களிடம் இருந்து உடலியல் ரீதியாக விடுதலை பெற்றார்.

இவரது மரணச் செய்தி உலக தலைவர்களை யும், உலக மக்களையும் அதிர்ச்சியடையச் செய் தது. தென்னாபிரிக்க வரலாற்றிலே என்றுமே இல் லாத அளவு பாரியதொரு நிகழ்வாக 12 நாட்க ளுக்கு அவரது துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

(19ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் டென்டுல்கார்




Master Batsman என்றழைக்கப்படும் சச்சின் டென்டுல்காரின் முழுப் பெயர் சச்சின் ரமேஷ் டென்டுல்கார் என்பதாகும். இவர் 1973 ஏப்ரல் 24ல் மும்பையில் பிறந்தார். 1989ம் ஆண்டு தனது 16வது வயதில் பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டியில் விளையாடியதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் உலகில் காலடி எடுத்துவைத்தார். 1990ல் இங்கிலாந்து அணிக்கு எதிராக தனது முதலாவது சதத்தைப் பெற்றுக் கொண்டார்.

2010 பெப்ரவரி 24ல் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் இரட்டைச் சதம் அடித்ததன் மூலம் ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் அடித்த முதல் நபர் என்ற பெருமை அவரை வந்தடைந்தது. தேர்வுப் போட்டி, டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் (தேர்வுப் போட்டி - 15000, டெஸ்ட் - 16000, ஒருநாள் - 18000) அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவராகவும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் ஆகிய இரு போட்டிகளில் நூறு சதங்களைக் கடந்தவராகவும் இவர்காணப்படுகிறார்.

இவருக்கு 1994ல் அர்ஜுனா விருதும், 1997 - 98ல் ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருதும், 1997ல் விஸ்டன் மிகச் சிறந்த வீரர், 1999 பத்மசிறி, 2008 பத்ம விபூஷன், 2013 பாரத ரத்னா போன்ற உயர் விருதுகள் கிடைத்தன. பாரத ரத்னா விருது இந்தியாவில் மிக உயரிய விருதாக கருதப்படுகிறது.

2013 நவம்பர் 18இல் மேற்கிந்தியத் தீவுகளுடனான தனது 200வது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கட்டில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது ஐ.நா. வின் யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவுக்கான நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு அர்ஜுன் என்ற மகனும் சாரா என்ற மகளும் உள்ளனர்.



# கிரிஸ்டியானோ ரொனால்டோ திறக்கும் அருங்காட்சியகம்

அண்மையில் போர்த்துக்கேய உதைப்பந்தாட்ட வீரரான கிரிஸ்டியானோ ரொனால்டோ தனது வாழ்க்கை தொடர்பான ஓர் அருங்காட்சியகத்தை போர்த்துக்கல்லின் தீவான மடெஸ்ராவில் திறக்கவுள்ளார்.

கால்பந்துகள் அவரது புகைப்படங்கள் அவர் பெற்றுக்கொண்ட பதக்கங்கள் அடங்கலாக அவரது உதைப்பந்தாட்ட வாழ்வுடன் தொடர்பான பல பொருட்கள் அங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் தனது தந்தை வேலை செய்த உள்ளூர் விளையாட்டு மைதானத்தின் எப்சீ அன்டோரின்ஹா அணியில் முதன் முதலாக விளையாடியதுடன் 1990ஆம் ஆண்டு அங்கிருந்து தான் இவரது உதைப்பந்தாட்ட வாழ்க்கை ஆரம்பமானது.

பின்னர் தனது 12வது வயதில் விஸ்டனுக்கு சென்று தனது 18வது வயதில் மான்செஸ்டர் யுனைட்டட் கழகத்துடன் இணைந்ததன் மூலம் சர்வதேச உதைப்பந்தாட்ட வாழ்க்கையினுள் நுழைந்தார்.

## அம்லா படைத்த புதிய சாதனை

தென்னாபிரிக்காவின் டார்பனில் 08.12.2013 நடைபெற்ற இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான சர்வதேச ஒருநாள் கிரிகட் போட்டியில் தென்னாபிரிக்காவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹாஷிம் அம்லா 59 ஓட்டங்களை பெற்றபோது சர்வதேச ஒருநாள் போட்டியில் அதிவேகமாக 4000 ஓட்டங்களைக் கடந்தவர் என்ற சாதனையை நிலைநாட்டினார்.

இப்போட்டி அம்லாவின் 84வது சர்வதேச போட்டியாகும். இதன் முன்னர் மேற்கிந்திய வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் தனது 88வது போட்டியில் 1985இல் இச்சாதனையை நிலைநாட்டியிருந்தார். ரிச்சர்ட்டின் 28வருட சாதனையை அம்லா இப் புதிய சாதனை மூலம் முறியடித்தார்.


இதேபோன்று ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 2000 மற்றும் 3000 ஓட்டங்களைக் கடந்தவர் என்ற பெருமையும் அவர் கைவசமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியாளர்களின் பண்புகள்

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org



ஒருமுறை நளீம் ஹாஜியாரை அவரது வீட்டில் வைத்து சந்தித்தோம். பலதும் பத்தும் அவருடன் கலந்துரையாடினோம். உரையாடல் சுவையாக நீண்டு கொண்டு செல்ல அவர் தந்த தேநீரும் சுவையை அதிகரித்தது. அப்போது நளீம் ஹாஜியார் வாழ்க்கை அனுபவங்கள் பலதை எம்மோடு பகிர்ந்து கொண்டார். அவர் சொன்னார். ஒருமுறை வெளிநாட்டிலிருந்து வர்த்தகப் பிரமுகர் ஒருவர் விற்பனைக்காக தனியான விமானம் ஒன்றில் வந்து என்னை இரத்தினக்கல் சந்தித்தார். அவருடன் வியாபாரம் பேசியதில் எமது விலைக்கு அவர் உடன்படவில்லை. அப்போது ஜும்ஆவுக்கான நேரம் நெருங்கியது. வியாபாரத்தை நிறுத்திவிட்டு ஜும்ஆவுக்கு நேரமாகிவிட்டது என்று நாம் சென்றுவிட்டோம்.

ஜும்ஆ முடிந்து நாம் வீடு திரும்பி சிறிது நேரத்தில் அவர் மீண்டும் என்னை சந்திக்க வருகிறார். சரி, நீங்கள் கேட்ட விலைக்கு நான் உடன்படுகிறேன். வியாபாரத்தை முடித்துக் கொள்வோம் என்றார். நான் சொன்னேன். அப்போதே எனக்கும் உங்களுக்கும் இடையில் வியாபாரம் முடிந்துவிட்டது. இப்போது புதிதாக ஆரம்பிப்போம். அதற்கு அவர் உடன்படவே, புதிதாக வியாபாரப் பேச்சுவார்த்தை ஆரம்பித்து முன்னதை விட அதிக இலாபத்திற்கு வியாபாரம் நிறைவுற்றது.

பின்னர் நளீம் ஹாஜியார் கூறினார். அவர் ஜும்ஆ நேரத்தில் பல வியாபாரிகளிடம் சென்றுள்ளார். ஏனையவர்களுடனான வியாபாரம் அவர் எதிர்பார்த்த இலாபத்தைத் தரவில்லை. அது தான் ஜும்ஆவுக்குப் பிறகும் எம்மிடம் வந்தார்.

பாருங்கள், அல்லாஹ்வின் அருளை. நாம் ஜும்ஆவுக்குப் போகாமல் அந்த வியாபாரத்தை செய்திருந்தால் அதில் பரக்கத் இருக்காது. இலாபமும் குறைவாகத்தான் கிடைத்திருக்கும். ஆனால், ஜும்ஆவுக்கு சென்ற திருப்தி ஒருபுறம். அதன் நன்மைகள் மறுபுறம். வியாபாரத்தில் அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அதிகமாகவே கிடைத்தது.

தொடர்ந்து கூறினார். வியாபாரத்தில் ஒரு பொய் சொன்னால் ஓர் இலட்சம் பணம் கிடைக்குமாக இருந்தாலும் நான் ஒரு பொய் சொல்ல மாட்டேன்.

என்ன அருமையான முன்மாதிரி. அழகிய வாழ்க்கை. இது அவருடைய வாழ்க்கையின் வரையறைகள். நான் இப்படித்தான் வாழ்வேன் என்று வரிந்து கட்டிக்கொண்ட கொள்கை.

''நானும் நேர்மையான வியாபாரியும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம்'' என நபியவர்கள் தனது சுட்டுவிரலையும் பெருவிரலையும் இணைத்துக் காட்டிக் கூறினார்கள்.

வியாபாரத்திலும் சரி, வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் சரி, இப்படியான வரையறைகள், வரிந்து கட்டிக் கொள்ளும் கொள்கைகள் அவசியம்.

வாரன் பப்பெட் உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர். 2008ம் ஆண்டு உலகின் முதற்தர கோடீஸ்வரராக தரப்படுத்தப்பட்டவர். 63 வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர். அவர் தனது வாழ்வின் வெற்றிக்கு சில வரையறைகளை நிர்ணயித்திருந்தார்.

எமக்கு இலட்சக்கணக்கில் பணம் கிடைத்தால் என்ன செய்வோம்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு, கார், பங்களா... என கிளம்பிவிடுவோம். உலகின் முதற்தரக் கோடீஸ்வரராக உயர்ந்த பின்பும் தான் முதலில் வாங்கிய வீட்டிலேயே வசித்து வருகிறார். அந்த வீடு தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவே கருதுகிறார். அந்த வீட்டைச் சுற்றி மதில்கூட இல்லை. தனது காரை தானே ஓட்டிச் செல்கிறார். சாரதியோ, பாதுகாப்பு வீரர்களோ இன்றியே பயணிக்கிறார். அவர் ஒரு நேர்காணலில் கூறினார்.

இவற்றை நினைவில் கொள்ளுங்கள் :

1) பணம் மனிதனைப் படைக்கவில்லை. மனிதனால் படைக்கப்பட்டதுதான் பணம்.

2) முடிந்தவரை எளிமையாக வாழப் பழகுங்கள்.

3) மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக எதுவும் செய்யாதீர்கள். அவர்கள் கூறுவதை கவனத்தில் கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கு சரியெனத் தோன்றுவதை செயல்படுத்துங்கள்.

4) விலை மிகுந்த ஆடைகளை அணிவதை விட நீங்கள் விரும்பும் ஆடைகளை அணிந்திடுங்கள்.

5) அவசியமற்றவைகளுக்காக செலவிடுதலைத் தவிர்த்து அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே செலவிடுங்கள்.

6) உங்களுடைய வாழ்க்கையை மற்றவர்களுக்குக் காட்டுவதற்காக வாழ்வதை விடுத்து உங்களுக்காக வாழுங்கள்.

அவரோ வருடத்திற்கு ஒருமுறை தான் ஒரு கம்பனியுடன் கூட்டம் நடத்துவார். கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வருடத்திற்கு ஒரு தொலைபேசி அழைப்பு. வருடத்திற்கு ஒரு கடிதம். அந்தக் கடிதமும் இரண்டே இரண்டு வரிதான்.

நான் உங்களுக்கு இரண்டே இரண்டு விதிகளைப் பின்பற்றுமாறு பணிக்கிறேன்.

ஒன்று, எமது வர்த்தகப் பங்குதாரர்களின் முதலீட்டை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இழந்து விடாதீர்கள்.

இரண்டாவது, முதலாவது விதியை கடுமையாகப் பின்பற்றுங்கள்.

இப்படி பல விதிமுறைகளை, வரையறைகளை வகுத்து வாழ்பவர்கள் தான் வெற்றி பெறுகின்றனர். நாம் எமது வாழ்க்கைக்கு என்ன விதிமுறைகளை அல்லது வரையறைகளை வைத்திருக்கின்றோம்?

கொகா கோலா கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அண்மையில் ஒரு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அதில் உரையாற்றிய அவர், ''நான் உரிய நேரத்திற்கு அலுவலகத்திற்குச் செல்வேன். உரிய நேரத்திற்கு அலுவலகத்தில் இருந்து திரும்பி விடுவேன். பின்னர் எனது குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பேன். நீங்களும் உரிய நேரத்திற்குக் கருமமாற்றப் பழகுங்கள். உங்கள் குடும்பத்துடன் இருக்க நேரம் ஒதுக்குங்கள்'' என்று குறிப்பிட்டார்.

இப்படி ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் வாழ்க்கை வழிமுறைகள் அவர்களின் வெற்றிக்குக் காரணமாகும். வாழ்க்கையில் அவர்கள் வகுத்துக் கொண்ட சுயமுன்னேற்றக் கோட்பாடுகளே அவர்களுக்கு வெற்றியளித்தன. எம்மிடம் அத்தகைய வெற்றிக் கோட்பாடுகள் உள்ளனவா?


### நீங்கள் நீங்களாக வாழுங்கள்

முன்னாள் அமெரிக்க அதிபர் Calvin Coolidge தனது சொந்த ஊரிலிருந்து நண்பர்கள் சிலரை வெள்ளை மாளிகைக்கு விருந்துக்கு அழைத்திருந்தார். வெள்ளை மாளிகையில் சாப்பாட்டு மேசையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ எனப் பயந்த நண்பர்கள், அதிபர் Coolidge செய்வதை அப்படியே பின்பற்றத் தீர்மானித்தனர். முதலில் தேநீர் பரிமாறப்பட்டது. தேநீர் வழங்கப்படும் வரையிலும் அவர்களின் அந்த யோசனை வெற்றி பெற்றது. அதிபர் தேநீரை கோப்பையில் ஊற்றினார். அவர்களும் அப்படியே செய்தனர். Coolidge தேநீரில் சீனியும் இணுனுச் கலந்தார். நண்பர்களும் அப்படியே செய்தனர். பின்னர் Coolidge குனிந்து கோப்பையை தரையில் பூனைக்கு வைத்தார். நண்பர்கள் விழி பிதுங்கி நின்றனர்.

நீங்கள் நீங்களாக வாழ்வதும் உங்கள் வாழ்க்கைகான கொள்கைகள், வரையறைகளை நிர்ணயம் செய்வதும் மிக முக்கியமாகும். உங்கள் வாழ்க்கை வெற்றிக்கு நீங்கள் பின்பற்றும் கொள்கை, கோட்பாடு, உங்களுக்கு நீங்களே வகுத்துக் கொண்ட வரையறைகள் என்பன பிரதானமானவை.

உங்கள் வாழ்க்கை வரையறைகளை வரைந்து வெற்றிபெற 2014ஆம் ஆண்டில் திடவுறுதி பூண்டு கொள்ளுங்கள். வாழ்த்துகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாரத ரத்னா விருது

◆ இது இந்தியாவின் மிக உயரிய விருதாகும்.

◆ இந்தியாவில் கலை, இலக்கியம் அரசியல் மற்றும் பொதுத் துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது.

◆ இவ்விருதை சச்சின் டெண்டுல்கார் பெற்றுக் கொண்டதன் மூலம் விளையாட்டு உலகிலிருந்து இவ்விருது பெறும் முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.




திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo



## இலங்கையில் சுற்றோட்டத்தில் உள்ள நாணயக் குற்றிகள்

| | |
|---|---|
| பத்து ரூபாய் குற்றிகள் | - 157, 445, 382 |
| ஐந்து ரூபாய் குற்றிகள் | - 604, 367, 758 |
| இரண்டு ரூபாய் குற்றிகள் | - 503, 368, 315 |
| ஒரு ரூபாய் குற்றிகள் | - 711, 334, 933 |
| ஐம்பது சத குற்றிகள் | - 371, 422, 434 |



## 2013ம் ஆண்டின் சிறந்த டெனிஸ் வீராங்கனை

◆ கடந்த ஆண்டின் சிறந்த டெனிஸ் வீராங்கனை விருதை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் பெற்றுள்ளார்.

◆ இவ்விருதின் பெயர் WDA என்பதாகும்.

◆ இவ் விருதை இவர் ஐந்து தடவைகள் (2002, 2008, 2009, 2012, 2013) பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்

◆ இத்தினம் வருடாந்தம் நவம்பர் 15இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.

◆ ஐ.நா சபையால் 1999ம் ஆண்டு முதல் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

◆ டொமிணிக்கன் குடியரசில் 'மறக்க முடியாத வண்ணத்துப் பூச்சிகள்' என அழைக்கப்படும் மிராபெல் சகோதரிகள் மூவர் பாதிக்கப்படும் பெண்களுக் கெதிராக குரல் கொடுத்தமைக்காக படுகொலை செய்யப்பட்டமையை நினைவுகூருமுகமாக இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

## உலக ஹலோ தினம்

◆ இத்தினம் வருடாந்தம் நவம்பர் 21இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.

◆ 1973ம் ஆண்டில் எகிப்து மற்றும் இஸ்ரேல் இடையே ஏற்பட்ட தகராறையொட்டி இத்தினம் அறிவிக்கப்பட்டது.

◆ ஹலோ எனும் சொல்லானது ஹலா, ஹொலா என்ற பழங்கால ஜேர்மன் மொழி வார்த்தைகளில் இருந்து வந்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சர்வதேச ஆண்கள் தினம்

சர்வதேச ஆண்கள் தினம் வருடாந்தம் நவம்பர் 19இல் கொண்டாடப்படுகிறது.

இத்தினம் 1999இல் இருந்து அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

## 2014ம் ஆண்டு உலகக் கிண்ண கால்ப்பந்தாட்டத் தொடருக்கான பந்து

◆ 2014ம் ஆண்டு பீபா உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி பிரேஸிலின் றியோ டி ஜெனிரோவில் நடைபெறவுள்ளது.

◆ இப்போட்டிக்காக ''பிரேஸுகா'' என பெயரிடப்பட்டுள்ள பந்தை பிரபல விளையாட்டு நிறுவனமான அடிடாஸ் உற்பத்தி செய்துள்ளது.

◆ உலகக் கிண்ண கால்பந்தாட்ட வரலாற்றில் பயன்படுத்தப் பட்ட பந்துகளில் மிகவும் வன்மையான பந்து இது வாகும்.

◆ இது Polyurethane எனும் மூலகத்தினால் ஆக்கப்பட்டுள்ளது.







## இலங்கையின் வரவு செலவுத் திட்டம் - 2013

◆ இது இலங்கையின் 67வது வரவு செலவுத் திட்டமாவதுடன் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 35வது வரவு செலவுத் திட்டமாகும்.

◆ முதலாவது வரவு செலவுத் திட்டம் 1947.12.01இல் முன்னாள் நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

◆ இலங்கையில் கூடிய தடவைகள் (2006, 2007, 2008, 2009, 2010, 2011, 2012, 2013) வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த நிதி அமைச்சர் - மஹிந்த ராஜபக்ஷ ஆவார்

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 1469.5 பில்லியன் ரூபா |
| மொத்த செலவீனம் | 1985.6 பில்லியன் ரூபா |
| மொத்த பற்றாக்குறை | 516.1 பில்லியன் ரூபா |

பொருளாதார வளர்ச்சி 7.7%




## கெசினோ சூதாட்ட சட்ட மூலம்

◆ கொழும்பின் பல இடங்களில் காணப்படும் கெசினோ நிலையங்களை ஓர் இடமான டி.ஆர் விஜயவர்தன மாவத்தைக்கு மாற்றுவது தொடர்பாக அரசினால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட இருந்தது.

◆ இதன் மூலம் கெசினோ மன்னன் என அழைக்கப்படும் 'ஜேம்ஸ் பெக்கருக்கு' பல்வேறு வரிச் செலுகைகள் வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.


## 2013ம் ஆண்டின் சிறந்த தடகள வீர, வீராங்கனை

◆ சிறந்த தடகள வீரருக்கான விருதை உலகின் அதிவேக மனிதன் ஜமைக்காவின் உசைன் போல்ட் பெற்றுள்ளார்.

◆ சிறந்த தடகள வீராங்கனைக்கான விருதை உலகின் அதிவேக வீராங்கனை ஜமைக்காவின் ஷெலின் ஆன் ப்ரேசர் பிரேஷ் வென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுற்றளவு


**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

*01.* பின்வரும் உருக்களின் சுற்றளவுகளைக் காண்க.


i. சுற்றளவு=





ii. சுற்றளவு=





iii. சுற்றளவு=




iv. சுற்றளவு=





v. சுற்றளவு ?




*02.* ஆரைச்சிரைகளுடன் தொடர்பான தளவுருக்களின் சுற்றளவைக் காணல்.


அரைவட்ட வில்லின் நீளம் $l = \pi r$





$\frac{1}{4}$ வட்ட அடரின் சுற்றளவு =

$$P = \frac{90}{360} \times 2\pi r + \pi r$$

$$P = \frac{\pi r}{2} + 2r$$





i. வட்டத்தின் சுற்றளவு = $2\pi r$





உருவின் சுற்றளவு =

ii. வில்லின் நீளம் = $\pi r$





உருவின் சுற்றளவு =




உருவின் சுற்றளவு


$= \pi r +$




உருவின் சுற்றளவு

$= \pi r +$

*03.* உருவில் உள்ளது மைதானம் ஒன்றின் ஓடு பாதையின் மாதிரி வடிவமாகும்.




i. ஓடுபாதையின் சுற்றளவு யாது ?


ii. இதனைச் சுற்றி ஒருவர் 4 தடவைகள் ஓடி முடித்தால் அவர் எத்தனை மீற்றர்கள் ஓடியுள்ளார் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. 10 000 m தூரத்தை வீரரொருவர் இதனை சுற்றி ஓடி முடிக்க எத்தனை தடவைகள் ஓட வேண்டும்?


04. தரப்பட்ட உருவின் சுற்றளவு 120m எனின்




i. வட்டப் பகுதியின் ஆரையைக் காண்க.

ii. செவ்வகத்தின் அகலத்தைக் காண்க.

05. உருவில் 7cm, 28cm விட்டமுடைய இரு சில்லுகள் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு இணைக்கப்பட்டுள்ளன.




i. சிறிய சில்லின் சுற்றளவு யாது?

ii. பெரிய சில்லானது 1 தடவை சூழலும் போது சிறிய சில்லானது எத்தனை தடவைகள் சுழலும்?

**வர்க்கமூலம்**

1. பின்வரும் எண்களின் 1ம் அண்ணளவாக்கப் பெறுமானத்தைக் காண்க.

i. $\sqrt{76}$

$\sqrt{64} < \sqrt{76} < \sqrt{84}$

8 ........

ii. $\sqrt{248}$

$\sqrt{\ } < \sqrt{248} < \sqrt{\ }$

......... .......... ..........

02. பின்வரும் எண்களின் வர்க்கமூலம் பெறுமானங்களை இரு தசமதானத்தில் தருக.

i. $\sqrt{130}$

$\sqrt{121} < \sqrt{130} < \sqrt{144}$

11 ........ 12

ii. $\sqrt{204}$

$\sqrt{\ }$ $\sqrt{204}$ $\sqrt{\ }$

......... .......... .........

03. $\sqrt{3} = 1.732$ எனின் $\sqrt{48}$ இன் பெறுமானத்தை இரு தசம தானங்களில் தருக?

**பின்னங்கள்**

01. சுருக்குக.

i. $\left(3\frac{1}{4} - 1\frac{1}{3}\right) \div 3\frac{5}{6}$

ii. $3\frac{1}{2} \div \left(1\frac{1}{2} - 1\frac{5}{9}\right)$

02. ஒருவர் தனது வருமானத்தின் $2/5$ பகுதியை தனது சகோதரனுக்கும் எஞ்சியதன் $4/9$ பகுதியை தனது மகனுக்கும் கொடுத்தார். மிகுதியை தனது சேமிப்பில் இட்டார்.

i. மகனுக்கு கொடுத்தது முழுவதன் என்ன பின்னம்?

ii. சேமிப்பில் இட்டது ரூ. 9 000 எனின் அவரது மொத்த வருமானம் யாது?

iii. சகோதரனுக்கு கொடுத்தது எத்தனை ரூபா?

03. தனவந்தர் ஒருவர் தன்னிடம் உள்ள காணியின் $1/6$ பகுதியை பாடசாலைக்கும் எஞ்சியதன் 9/20 பகுதியை கலாச்சார நிலையத்திற்கும் வழங்கிய பின்னர் 5/24 பகுதியை அநாதைகள் இல்லத்திற்கும் வழங்கினார்.

i. கலாச்சார நிலையத்திற்கு வழங்கியது முழுவதன் என்ன பின்னம்?

ii. இறுதியாக அவரிடம் உள்ள காணி முழுவதன் என்ன பின்னம்?

iii. அநாதை இல்லத்திற்கு வழங்கியது 40 பேர்சஸ் எனின் அவரிடம் ஆரம்பத்தில் இருந்த காணி எத்தனை பேர்சஸாகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. i. 9 யை விடையாகப் பெறுவதற்கு $3\frac{3}{8}$ யைக் கொண்டு பெறுக.

ii. $\frac{9}{10}$ ஆனது $\frac{3}{5}$ இன் எத்தனை மடங்கு?

iii. $\left(\frac{5}{6}+\frac{1}{3}\right), \left(\frac{5}{6}-\frac{1}{3}\right)$ என்பவற்றுக்கிடையிலான வித்தியாசத்தைக் காண்க.

## ஈருறுப்புக் கோவைகளின் விரிவு

01. பின்வரும் நிறைவர்க்க கோவைகளின் விரிவினை எழுதுக.

i. $(2x-5)^2$

ii. $(3k+2y)^2$

02. பின்வரும் கோவைகளின் பெருக்கத்தை விரித்து எழுதுக.

i. $(4a-3x)(2a+x)$


ii. $(7m-5n)(2n-3m)$

03. தொகுதிற்கு A பொருத்தமான நிறைவர்க்க கோவையை தொகுதி A யில் தெரிவுசெய்து இணைக்க.

| | |
|---|---|
| $4x^2+4x+1$ | $(2x-1)^2$ |
| $9x^2+12x+4$ | $(3x+1)^2$ |
| $4x^2-4x+1$ | $(3x+2)^2$ |
| $(3x)^2-12x+4$ | $(2x+1)^2$ |
| $9x^2+6x+1$ | $(3x-1)^2$ |

04. செவ்வகங்களின் பரப்பளவைக் காண்பதன் மூலம் ஈறுருப்புக் கோவைகளைப் பெருக்குக.

i. $(2x+3)(x+1)$




செவ்வகங்களின் பரப்பளவு


=...............+ ...........+ ...........+ ............

=.........................cm²

## உலகக் கோப்பை உதைப்பந்தாட்டப் போட்டிகள்

2014 ஜூன் 12 முதல் ஜூலை 13 வரை பிரேஸில் நாட்டில் உலகக் கிண்ண பீபா உதைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஒரு குழுவில் 4 அணிகள் அடங்கலான 32 அணிகள் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிரேஸிலின் 6 விளையாட்டரங்குகளில் நடைபெறும் இப்போட்டிகளின் முதலாவது போட்டி பிரேஸில் மற்றும் குரேஷியா அணிகளுக்கிடையிலான போட்டியுடன் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 32 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளுக்காக 'சுபிரேஸுகா' எனும் புதிய பந்தை அடிடாஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது.


இப்பந்தானது 'Poly urethan' என்ற மூலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட வரலாற்றில் பயன்படுத்தப்பட்ட பந்துகளில் வன்மையான பந்தாக இது கருதப்படுகின்றது. இப்போட்டிக்காக 578 மில்லியன் பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளதாகவும் உலகக் கிண்ண




தொடரை கைப்பற்றும் அணிக்கு 35 மில்லியன் டொலர்களும் 2ஆம் இடத்தை பெறும் அணிக்கு 25 மில்லியன் டொலர்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த இதழின் தொடர்...

*ஹனிபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)*

## கேள்வி: 03

**கணிதம் ஒரு வேப்பங்காய் அல்ல என்பதை உணர வைத்தது போல வரலாறு ஒரு வேப்பங்காய் அல்ல என்பதை உணர வையுங்கள். வரலாற்றைப் படிப்பதற்கு இலகு டிப்ஸ் ஏதாவது ப்ளீஸ்?**

## பதில்:

பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்கள் தொடர்பாக பார்க்கும் போது கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்பன கடினமான பாடங்கள் என்ற மனப்பதிவை இலங்கை வாழ் மாணவர்கள் பொதுவாகக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. வரலாறும் ஒரு கஷ்டமான பாடம் என்ற நிலைப்பாடு காணப்பட்ட போதிலும் அவ்வளவாக அது பற்றிப் பேசப்படவில்லை. ஆனால், அண்மைக் காலமாக வரலாறு ஒரு கஷ்டமான பாடமாகப் பார்க்கப்படுகிறது. கற்பிக்கப்படும் பாடங்கள் தொடர்பான மணவர்களின் மனப்பதிவு இவ்வாறு காணப்படுவதற்கு பாடங்களின் இயல்புகள், மாணவர்கள், ஆசிரியர்கள், நாட்டின் கல்விக் கொள்கை, நாட்டின் சூழல் மற்றும் வாழ்க்கைப் பாங்கில் ஏற்படும் மாற்றம் என பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. இவை பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்

### பாடங்களின் இயல்புகள்

இங்கு கஷ்டம் என்று சொல்லப்படும் பாடங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான இயல்புகளைக் கொண்டுள்ளன. கணிதப் பாடம் முற்று முழுதாக செய்முறைப் பயிற்சிகளை வேண்டி நிற்கும் ஒரு பாடமாகும். ஒருவர் எவ்வளவு பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்து பார்க்கின்றாரோ அந்தளவுக்கு கணிதப் பாடம் தொடர்பான பிரச்சினைகளை வேகமாகவும் சரியாகவும் செய்து முடிப்பார். விஞ்ஞானப் பாடம் கணக்கு, மனனம், ஆய்வுகூடப் பயிற்சி எனப் பல அம்சங்களை உள்ளடக்கியது. ஆங்கிலம் ஒரு மொழி என்பதால் ஒவ்வொரு நாளும் சாதாரண வாழ்க்கையில் பிரயோகிக்கப்பட வேண்டும். வரலாற்றைப் பொறுத்தவரை மனனம் செய்யவேண்டிய பகுதிகள் நிறைந்த ஒரு பாடமாகும். இவ்வாறு ஒவ்வொரு பாடமும் வித்தியாசமான இயல்பைக் கொண்டமைந்துள்ளது. இங்கு கஷ்டம் என விபரிக்கப்படும் பாடங்கள் சில மாணவர்களுக்கு மிக இலகுவானதாகவும் இலகுவானது என்று வர்ணிக்கப்படும் பாடங்கள் கஷ்டமாகவும் காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. கஷ்டமா, இலகா என்பதைத் தீர்மானிப்பதில் மாணவர்களின் இயற்கையான நுண்ணறிவும் தாக்கம் செலுத்துகிறது என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு வரலாறு கஷ்டம் என்று சொல்லும் மாணவர்களுக்கு வேறு பாடங்கள் இலகுவாக இருக்கலாம்.

### மாணவர்கள்

பாடங்கள் தொடர்பான மணவர்களின் மனப்பாங்கும் பாடங்கள் கஷ்டமாக அமைவதில் தாக்கம் செலுத்துகிறது. ஏன் இந்தப் பாடத்தைப் படிக்கின்றோம்? இதனால் எமக்குக் கிடைக்கும் பிரதிபலன், இலாபம் என்ன? என்ற புரிதல் இன்றிப் படித்தால் நிச்சயமாக அந்தப் பாடம் மனதில் பதியும் வாய்ப்பு மிக மிகக் குறைவானதே. குறிப்பாக இன்றுள்ள மாணவர்கள் வரலாற்றைப் படிக்கும்போது மன்னர்களைப் பற்றி பாடமாக்கி எனக்கு என்ன பிரயோசனம்? சும்மா நேரத்தை வீணாக்காமல் வேறு எதையாவது செய்யலாம் என்று நினைக்கின்றனர். இவ்வாறான சிந்தனைகள் அப்பாடத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகின்றன. வரலாறு வேப்பங்காயாக மாறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

மாறாக இலங்கையில் வாழும் சிறுபான்மை இன மக்களின் இருப்புக்கு, சமாதானமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு எமது வரலாற்றைப் பற்றிப் படிக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தால் அப்பாடம் வேப்பங்கனியாக மாற வாய்ப்பு உண்டு.

## ஆசிரியர்கள்

ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்துவமான இயல்புகள் காணப்படுகின்றன என்று சொன்னேன். பாடங்களைக் கற்பிக்கும் போது அந்தந்தப் பாடங்களுக்குரிய தனித்துவமான இயல்புகளைக் கருத்திற் கொண்டு மாணவர்களுக்கு இலகுவாக விளங்கும் வகையில் சில ஆசிரியர்கள் பாடங்களை நடத்துவது குறைவு. இதுவும் குறித்த பாடம் கஷ்டமானதாக மாறுவதற்குக் காரணமாக அமைகிறது. இன்று மனித வாழ்க்கைக்குப் பிரயோசனமில்லாத, பொழுதுபோக்கான விடயங்களை இலகுவாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் வகையில் நவீன தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களைச் சொல்லித் தரும் பாடசாலைகளில் அத்தகைய தொழிநுட்பங்கள் இல்லை. அல்லது இருந்தும் பயன்படுத்தாமை கவலை தரும் விடயமாகவே உள்ளது.

வரலாற்றுப் பாடத்தைப் பொறுத்தவரை வெறுமனே புத்தகங்களை மாத்திரம் பயன்படுத்தாமல் பழைய இடங்கள், வரலாறுகள் தொடர்பான குறும்படங்கள், விவரணப்படங்கள் போன்றவற்றை மல்டிமீடியா போன்ற உபகரணங்களை பயன்படுத்திப் படிப்பித்தால் மாணவர்கள் மிக இலகுவாக விருப்பத்துடன் படிக்க வாய்ப்புண்டு.

## நாட்டின் கல்விக் கொள்கை

வரலாறு மிகக் கஷ்டமான ஒரு பாடம் என்ற கோஷம் ஆரம்ப காலங்களிலிருந்தே காணப்பட்டாலும் மிக அண்மைக்காலமாக அதிகமாக ஒங்கி ஒலிப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் வரலாற்றுப் பாடம் தொடர்பாக நாட்டின் கல்விக் கொள்கையில் ஏற்பட்ட ஒரு மாற்றமே என்று கூறலாம். க.பொ.த உயர்தரத்தின் வர்த்தப் பிரிவில் படிக்கவேண்டும் என்றால் சாதாரண தரத்தில் வரலாற்றுப் பாடத்தில் உ/தரச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்தவகையில் முன்னர் விருப்பத்துக்குரிய பாடமாக இருந்த வரலாறு இன்று ஒரு கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டமையானது அது ஒரு கஷ்டமான பாடமாகப் பார்க்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

## நாட்டின் வாழ்க்கைப் போக்கு

இன்று பொருளாதாரத்தை மையப்படுத்திய கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வரலாறு என்பது பொருளாதாரத்தை ஈட்டித் தராது என்ற எண்ணம் மாணவர்களிடத்தில் எழுவதால் அதற்கான முக்கியத்துவம் குறைந்து செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறு வரலாற்றுப் பாடம் கஷ்டமாக அமைவதற்கு பல காரணங்களை முன்வைத்த போதிலும் நாம் வாழும் சமூகத்தில் நாம் வரலாறு படைக்க வேண்டுமென்றால் நிச்சயமாக எமது நேற்றைய வரலாற்றைப் படிப்பது இன்றியமையாதது என்பதை மனதில் நிறுத்தி தூர இலக்குடன் படித்தால் வரலாற்றுப் பாடமும் நிச்சயமாக வேப்பங்காய் அல்லாமல் கனியாக மாறும் வாய்ப்பு ஏற்படும் இன்ஷா அல்லாஹ்.

## வரலாற்றைப் படிப்பதற்கான சில டிப்ஸ்

### Time Line

இலங்கையின் வரலாறு பற்றிய பாடத்திட்டத்தில் வரலாற்றைப் படிப்பதற்கான மூலாதாரங்கள், இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி, பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரை இலங்கையின் வரலாறு, நீர்வள நாகரிகம், மத்தியகால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள், இலங்கையின் பண்டைய வரலாறு, ஐரோப்பாவின் அதிகாரம் விரிவாக்கம் பெற்ற விதம், இலங்கைக்கும் மேற்கத்தியத்திற்கும் இடையில் நிலவிய தொடர்புகள் மற்றும் ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள், முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், ஐ.நா சபையின் தோற்றம், கைத்தொழிற் புரட்சி, ஜப்பானின் வரலாறு போன்ற அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன.

இவ்வாறான வரலாற்று நிகழ்வுகளையும் அவை இடம்பெற்ற ஆண்டு, நிகழ்வோடு தொடர்புபட்ட முக்கிய நபர்கள், இடங்கள் போன்ற தகவல்களை நீண்டகால ஞாபகத்தில் சிரமமின்றி பதிந்து வைத்துக்கொள்ள Time Line என்ற உத்தி உதவியாக அமைகிறது.

*உதாரணம்: 1*

30 வருடகாலமாக இலங்கையில் நடைபெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு யுத்த வரலாற்றின் முக்கிய தகவல்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள ஒருவர் விரும்புவாராயின் இந்த உத்தியைப் பயன்படுத்தலாம்.

உதாரணம் :2

இலங்கை மீதான அந்நிய நாட்டு ஆதிக்க வரலாற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இந்த உத்தி மிகவும் துணை செய்கிறது.

1500 இற்குப் பின் இலங்கை

1. போர்த்துக்கீசர் இலங்கை வருகை

1453 - கொன்ஸ்த்தாந்திநோபிள் (ஸ்தான்பூல்) துருக்கியர் வசமாதல்

1498 - வாஸ்கொடகாமா இந்திய வருகை

1505 - லோரன்ஸ் தீ அல்மேத்தா (போர்த்துக்கீசர்) இலங்கை வருகை

1521 - விஜயபாகு கொள்ளை

1597 - கோட்டை இராசதானி போர்த்துக்கீசர் வசமாதல்

**சிங்கள அரசர்களுக்கும் போர்த்துக்கீசருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தங்கள்**

1562 - முல்லேரியாப் போர்

1594 - தந்துரைப் போர்

1602 - பலனைப் போர்

1630 - ரந்தனிவலை போர்

1638 - கன்னறுவை போர்

இவ்வாறு ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகைகளில் காணப்படும் முக்கிய ஆண்டுகளையும் அதில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும் சுருக்கமாக வரலாற்று ஒழுங்கில் எழுதி மனனம் செய்துகொண்டால் குறிப்பிட்ட இரண்டு ஆண்டுகளுக்கிடையில் நடைபெற்ற ஏனைய அம்சங்களை இலகுவாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

உதாரணம் இரண்டில் குறிப்பிட்டுள்ளது போன்று உங்களுக்குத் தரப்பட்ட வரலாறுப் பாடப் புத்தகத்திலுள்ள எல்லா ஆண்டுகளையும் அதனோடு தொடர்பான முக்கிய நிகழ்வுகள் மற்றும் முக்கிய நபர்களையும் வரலாற்று ஒழுங்கில் தொகுத்து ஒரு கையேட்டைத் தயாரித்துக் கொண்டால் பரீட்சைக்கும் வாழ்க்கைக்கும் தயாராகுவது மிக இலேசானதே.

இவை கைக்கடக்கமான சிறிய அட்டைகளில் முக்கியமான வரலாற்றுத் துணுக்குகளை எழுதி மனனம் செய்து கொள்ளலாம். வரலாறு தொடர்பான திரைப்படங்கள், சிறிய குறிப்புப் புத்தகங்கள் போன்றன சந்தையில் மலிந்துள்ளன. உதாரணமாக முதலாம், இரண்டாம் உலகப்போர் தொடர்பான முழு விவரணப் படமும் தமிழில் வெளிவந்துள்ளது. அவற்றிலிருந்து பிரயோசனமடைந்து கொள்ளலாம். தவிர, பாடசாலைச் சுற்றுலாக்களைத் திட்டமிடும்போது இலங்கையின் பிரதான இராசதானிகளைச் சென்று பார்வையிடும் வகையில் சுற்றுலாக்களை அமைத்துக் கொள்ளலாம்.

இலங்கையின் ஆறுகள், குளங்கள், ஆரம்ப காலத் துறைமுகங்கள், அகழ்வாராய்ச்சிக்குட்பட்ட பிரதேசங்கள் தொடர்பான இடங்களையும் பெயர்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள உங்களுடைய படிக்கும் அறையில் பெரிய இலங்கைப் படம் ஒன்றை வரைந்த அல்லது வாங்கி அவற்றைக் குறித்துக் கொண்டு தினமும் அவதானியுங்கள். பின்னர் சிறிய இலங்கைப் படத்தில் சுயமாக அவற்றைக் குறித்து சரியான விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இவ்வாறு தொடர்ந்தும் பயிற்சி செய்யும்போது இலகுவாக அந்த இடங்கள் ஞாபகத்தில் பதிந்துகொள்ளும். இது போலவே உலகப்படத்தையும் செய்யலாம்.

குறிப்பாக, வரலாறு வேப்பங்காய் அன்றி கனியாக மாறவேண்டுமென்றால் வரலாற்றைப் படிப்பதன் அவசியத்தை மனதில் இருத்திக் கொள்வதுடன் அதை விருப்பத்துக்குரியதொன்றாக மாற்றிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அது வேப்பங்கனியாய் இனிப்பானதாக மாறும் இன்ஷா அல்லாஹ்.

## உலக கணினிக் கல்வி தினம்


உலக கணினிக் கல்வி தினம் வருடாந்தம் டிசம்பர் 02இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10, 11** தர மாணவர்களுக்கு

# விஞ்ஞானம்



ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## அங்கிகளின் பாகுபாடும் பெயரீடும் / தரம் - 10 / உயிரியல்

உயிரங்கிகளை அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் கூட்டங்களாக வகைப்படுத்தும் முறை பாகுபாடு எனப்படும்.

01. a) இயற்கை முறைப் பாகுபாட்டை அறிமுகப்படுத்தியவர் யார்?

b) இயற்கை முறைப் பாகுபாட்டின் சிறப்பம்சங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

02. தாவர இராச்சியப் பாகுபாட்டுப் பிரிவுகளும் அவற்றிற்கான தாவர உதாரணங்களும் பற்றிய அட்டவணை பின்வருமாறு.

| தாவர வகை | உதாரணங்கள் |
|---|---|
| பிறையோபைற்றா | P |
| ரெறோபைற்றா | Q |
| R | செலாஜினெல்லா |
| S | மடுப்பனை, பைனசு |
| T | தென்னை, பனை, கமுகு |
| இருவித்திலைத் தாவரம் | பலா, கொய்யா, வேம்பு |

i. P, Q ஆகியவற்றில் அடங்கும் தாவர உதாரணங்களை எழுதுக.

ii. P, Q ஆகிய தாவரங்களின் சிறப்பியல்புகள் இரண்டு வீதம் குறிப்பிடுக.

iii. R, S, T ஆகிய எழுத்துகள் குறிக்கும் தாவரப் பிரிவுகளை எழுதுக.

iv. S, T வகைத் தாவரங்களுக்கிடையிலான 3 வேறுபாடுகளை எழுதுக.

v. பப்பாசித் தாவரம் எப்பிரிவில் அடங்கும்? இதற்கான இரு காரணங்களை எழுதுக.

### விடைகள்

01. a) கரோலஸ் லீனியஸ்

b) 1. அங்கிகளின் பல்வேறு இயல்புகள் கருத்திற் கொள்ளப்படும்.

2. வெவ்வேறு கூட்ட அங்கிகளுக்கிடையில் உண்மையான வேறுபாடுகள் காணப்படும்.

3. அங்கிகளுக்கிடையிலான கூர்ப்புத் தொடர்புகளைக் காட்டுவதாக அமையும்.

02. i. P - மார்க்கான்சியா, போகனேற்றம்

Q - நெப்ரோலெப்பிஸ், டிறைனேரியா, கல்வீனியா

ii. P - உடல் பிரிவிலி அமைப்புடையது, கலனிழையங்கள் அற்றவை

Q- வேர், இலை, தண்டு எனும் பிரிவுகளைக் கொண்டவை, கலனிழையங்கள் காணப்படும்

iii. R - இலைக்கோபைற்றா

Q - ஜிம்னஸ்பேர்ம்/ வித்து மூடியிலிகள்

T - ஒரு வித்திலைத் தாவரங்கள்

iv. S (**ஜிம்னஸ்பேர்ம்**)

- பூக்களை உருவாக்காது
- வித்துக்கள் திறந்ததாகக் காணப்படும்.
- பழம் காணப்படாது

T (**ஒரு வித்திலைத் தாவரம்**)

- பூக்களை உருவாக்கும்
- வித்துக்கள் மூடிய அமைப்புடையவை
- பழம் உருவாகும்

v. இருவித்திலைத் தாவரம். காரணம் ஆணி வேர் கொண்டவை, இலைகள் வலையுரு நரம்பமைப்புடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு இராச்சியப் பாகுபாடு

விலங்குகள் முள்ளந்தண்டின் அடிப்படையில் முள்ளந்தண்டிலிகள், முள்ளந்தண்டுகளிள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

02. a) முள்ளந்தண்டிலி விலங்குகளின் கணங்களும் அவற்றின் உதாரணங்களும் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. M - Q பெயரிடுக.

| அங்கிகள் | கணம் | பொதுப்பெயர் |
|---|---|---|
| 1. ஐதரா, இழுதுமீன், கடல் அனிமணி | (M) | (N) |
| 2. மண்புழு, லீச், நீரிசு | அனெலிடா | (O) |
| 3. நத்தை, கணவாய், ஒக்டோபஸ் | (P) | மெல்லுடலிகள் |
| 4. பூச்சிகள், நண்டு, இறால் | ஆத்திரப்போடா | (Q) |

b) பின்வரும் இயல்புகளுக்குப் பொருத்தமான விலங்குக் கணங்களை எழுதுக.

1. ஆரைச்சமச்சீரானவை, உடல் இருபடையலானது ..................
2. உடல் துண்டுபடல் அற்றது, தசை செறிந்த பாதம் உடையவை ...............
3. உடல் துண்டுபட்டது, புறவன்கூடு கைற்றின் இனாலானது .................

c) முள்ளந்தண்டைக் கொண்ட சில விலங்குகள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆமை, கடற்குதிரை, எறும்புதின்னி, பச்சோந்தி, தேரை, வெளவால், தீக்கோழி, திருக்கை, சலமந்தரா, பாம்பு, பிளாற்றிபஸ்

1. மேலுள்ளவற்றில் வகுப்புகள் பிசெஸ், அம்பிபியா, ரெப்தீலியா என்பவற்றில் அடங்குபவற்றைத் தனித்தனியே எழுதுக.
2. தீக்கோழி, வெளவால் அடங்கும் வகுப்புகளின் பொதுவான இயல்புகள் 2 ஐக் குறிப்பிடுக.
3. எறும்புதின்னி, பிளாற்றிபஸ் என்பன முலையூட்டிகளாயினும் அவற்றின் பொதுவான இயல்புகளில் எதில் இவை வேறுபடுகின்றன.
4. உபயவாழிகளின் சிறப்பியல்புகள் 3ஐக் குறிப்பிடுக.

## விடைகள்

02. a) M - சீலந்திரேற்றா

N - குழிக்குடலிகள் / நிடேரியா

O - துண்டப்புழுக்கள்

P - மொலஸ்கா

Q - மூட்டுக்காலிகள்

b) 1. சீலந்தரேற்றா

2. மொலஸ்கா

3. ஆத்திரப்போடா

c) 1. பிசெஸ் - கடற்குதிரை, திருக்கை

அம்பிபியா - தேரை, சலமந்தரா

ரெப்தீலியா - பச்சோந்தி, ஆமை, பாம்பு

2. ◆ இதயம் 4 அறைகளாகப் ◆ பிரிக்கப்பட்டது. மாறா ◆ வெப்பநிலைக்குரியவை

3. ◆ இவை குட்டியீனுவதில்லை ◆முட்டையிடும் முலையூட்டிகள்

4. ◆ வாழ்க்கை வட்டத்தை
◆ பூரணப்படுத்த நீர் அவசியம்
◆ இதயம் 3 அறைகளாலானது
◆ சூழல் வெப்பநிலைக் குருதி கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிலைத்த புள்ளி பற்றி இரு பக்கங்களிலும் ஏற்படும் சந்த இயக்கம் அதிர்வு எனப்படும். அதிர்வு காரணமாக அலைகள் உருவாகின்றன.

அலைகள் பொறிமுறை அலைகள், மின்காந்த அலைகள் என பிரதானமாக இரு வகைப்படும்.

பொறிமுறை அலைகள் கடத்தப்படுவதற்கு ஊடகம் அவசியமாகும். இது பின்வரும் இரு வகைப்படும்.

i. குறுக்கலைகள்

eg. நீர், இழைகளில் ஏற்படும் அலை

ii. நீள்பக்க அலைகள்

eg. வளியில் ஒலி பயணித்தல்

மின்காந்த அலைகள் கடத்தப்படுவதற்கு ஊடகம் அவசியமில்லை. இவற்றின் வேறுசில இயல்புகள் பின்வருமாறு

i. வெற்றிடம், வளியில் இதன் வேகம் $3x10^{8}ms^{-1}$ ஆகும்.

ii. இவை குறுக்கலைகளாகப் பயணிக்கும்.

iii. மின்னியல்பையும் காந்தவியல்பையும் ஒருங்கே கொண்டவை.

iv. தெறிப்பு, முறிவு விதிகளுக்கு அமைவானவை.

எந்தவொரு அலை இயக்கத்தினதும் வேகம் (v) பின்வரும் சமன்பாட்டினால் குறிப்பிடப்படும்.

$v = f\lambda$ f= அதிர்வெண்/ மீடிறன் (Hz)

$\lambda$ = அலை நீளம் (m)

01\. i. விண்வெளியில் ஏற்படும் ஒலியொன்றை புவியில் கேட்க முடியாது. இதன் காரணம் யாது?

ii. மனிதக் காதின் கேட்டல் புலனுணர்வு வீச்சு யாது?

iii. அதிர்வு இயக்கமொன்றில் ஏற்படும் அலைகள் 0.5 m அலை நீளத்தைக் கொண்டிருப்பின் அதன் அதிர்வு மீடிறன் யாது? (வளியில் ஒலியின் வேகம் $330ms^{-1}$ எனக் கருதுக)

iv. கழியொலி என்பது யாது? கழியொலிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 4 ஐ எழுதுக?

v. வயலின், கிற்றார் போன்ற இசைக் கருவிகளில் இசை எங்கனம் உருவாகின்றது?

vi. ஈர்க்கப்பட்ட தந்திகளுடைய இசைக் கருவிகளில் சுருதி கூடிய இசையை உருவாக்க உதவும் வழிகள் மூன்றை எழுதுக.

விடைகள்

01\. i. ஒலி பயணிக்க யாதேனும் ஒரு ஊடகம் அவசியமாகும். ஒலி வெற்றிடத்தினூடாகக் கடத்தப்படாது.

ii. 20Hz - 20 000Hz

iii. $v = f\lambda \quad f = \frac{v}{\lambda} = \frac{330}{05} = 660Hz$

iv. 20000 Hz இலும் கூடிய அதிர்வெண் கொண்ட ஒலி கழியொலி எனப்படும். இதன் பயன்கள்

1. கடலின் ஆழத்தை அறியப் பயன்படும்.
2. கடலில் அமிழ்ந்த பொருட்கள், மீன் கூட்டங்களைக் கண்டறியப் பய்ன்படும்.
3. வௌவால் இரவில் சூழலை அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.
4. உடலின் உட்பகுதிகளை படமெடுக்கப் பயன்படுகிறது.

v. இக்கருவியிலுள்ள இழைகள் அதிரச் செய்யப்படுவதால் ஒலி ஏற்படுகின்றது.

vi. தந்திகளின் (இழைகள்) இழுவையைக் கூட்டுதல், அதிரும் பகுதியின் நீளத்தைக் குறைத்தல், மெல்லிய இழைகளைப் பயன் படுத்தல்.

## ஒளியியல்

ஒளிக்கதிர்கள் நேர்கோட்டில் பயணிக்கும். அவை ஊடுபுகவிடாத கடின மேற்பரப்புக்களில் பட்டுத் தெறிப்படையும். இது பின்வரும் ஒளித்தெறிப்பு விதிகளுக்கமைவாகவே நிகழும்.

1. படுகதிர், தெறிகதிர், செவ்வண் ஆகிய மூன்றும் ஒரே தளத்தில் அமையும்.
2. படுகோணமும் தெறிகோணமும் சமனாகும்.

ஆடிகளில் ஒளித்தொகுப்பு நிகழ்வதன் காரணமாகவே விம்பங்கள் தோன்றுகின்றன. இது பின்வரும் 3 வகை ஆடிகளிலும் வேறுபட்ட வகையில் நிகழும்.

| ஆடி | விம்ப இயல்புகள் |
|---|---|
| தளவாடி | நிமிர்ந்தது, மாயமானது, பொருளளவானது, பக்க நேர்மாறானது. |
| குழிவாடி | பொருளின் நிலைக்கேற்ப வேறுபடும், நிமிர்ந்தது, தலைகீழானது, பக்க நேர்மானது, உருப்பெருத்தது, உருச் சிறுத்தது, பொருளளவானது, உண்மையானது, மாயமானது. |
| குவிவாடி | பொருள் எத்தூரத்தில் இருப்பினும் எப்போதும் நிமிர்ந்தது, மாயமானது, உருச்சிறுத்தது, பக்க நேர்மாறானது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைப் பாசம்




தமிழில்: அலா அஹமட்

அம்ஜத் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன். அவன் 70 வயது கடந்த தனது தந்தையுடன் வாழ்ந்து வருகிறான். ஒரு நாள் காலை திரை மறைவிலிருந்த கதிரவன் தன் கதிர்களினூடாக எட்டிப் பார்க்க ஆரம்பித்தான். பறவைகளின் கீதங்கள் தென்றலோடு கலந்து இசைக் கச்சேரி நடத்த ஆரம்பித்தன. மலர்கள் தம் சிறகுகளை விரித்து துயில் களையும் நேரம் அது.

அம்ஜதின் தந்தை வீட்டின் வராந்தாவில் வந்து உட்கார்ந்தார். வராந்தா ஜன்னல் வழியே உற்றுப் பார்த்தார். வயோதிபம் அவர் பார்வையின் சிறிதளவையே விட்டு வைத் திருந்தமையால் அவரால் வெளியே என்ன நிற்கின்றது என்பதனைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, அம்ஜத்தை அழைத்து என்ன அது என வினவினார். அதற்கு ''இது காகம்'' என அம்ஜத் விடையளித்தான். சில நிமிடங்களில் பின் 2 வது தடவையாகவும் ''இது என்ன?'' என வினவினார். அதற்கு ''வாப்பா நான் இப்பாதானே சொன்னேன் இது காகம்'' என்றான். சில நிமிடங்கள் தான் கழிந்திருக்கும் மீண்டும் அவர் ''இது என்ன?'' என வினவ அம்ஜத்திற்கு கோபம் மேலிட்டது. உரத்த குரலில் ''இது காகம்... இது காகம்... இது காகம்'' எனக் கத்தினான். மீண்டும் 4 வது முறையாகவும் ''இது என்ன?'' எனது தந்தை வினவ அம்ஜத் கோபத்தின் உச்சத்தை அடைந்தான். வெறுப்போடும் ஆத்திரத்தோடும் ''உங்களுக்கு நான் எத்தனை தடவைகள் சொல்வது... உங்களுக்கென்ன காது செவிடா... ஏன் அதே கேள்வியை சின்னப் பிள்ள மாதிரி மீண்டும் மீண்டும் கேட்கிறீங்க... உங்களுக்கு வேற வேல இல்லயா?'' என சப்தமிட்டான். மல்லிகை மலர்கள் போல நரை முடிகள் மலர்ந்திருந்த தந்தையின் வதனம் அம்ஜதின் சொற்களால் வாடி வதங்கியது.


சில நிமிடங்கள் கழித்து தந்தை தனது அறையினுள் நுழைந்தார். தூசு படிந்த ஒரு டயரியுடன் வந்து அதன் டைரியின் ஒரு பக்கத்தைத் திறந்து அதை வாசிக்குமாறு அம்ஜதிடம் கொடுத்தார். அதில்,

''இன்று எனது அன்பு மகனுக்கு 3 வயது. அவர் வீட்டு வராந்தையில் உட்கார்ந்திருந்தார். வீட்டின் முன்னுள்ள வேப்ப மரத்தில் ஒரு காகம் உட்கார்ந்திருந்தது. என் மகன் என்னிடம் ''இது என்ன?'' என 20 தடவைகள் மீண்டும் மீண்டும் கேட்டிருப்பார். அவன் கேட்ட அத்தனை தடவைகளும் நான் பதிலளித்தேன். அவன் அவ்வாறு கேட்கும் ஒவ்வொரு தடவையும் அவனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தேன். எனக்கு கோபமோ, எரிச்சலோ வரவில்லை. மாறாக, அவன் மீது அன்பு மட்டுமே வந்தது'' என எழுதப்பட்டிருந்தது.

20 தடவைகள் நான் ஒரே கேள்வியைக் கேட்டபோது எனக்கு அன்பு காட்டிய என் தந்தையை 4 தடவைகள் கேட்டதற்காக கோபமடைந்ததை எண்ணி அம்ஜத் மனம் வருந்தினான். தந்தையின் பாசத்தை சரியாக உணர்ந்து கொண்டான். ''தனது செயலுக்காக தந்தையிடம் மன்னிப்பு கோரினான்'' எனது தந்தையின் மனம் நோகுமாறு இனி நடந்து கொள்ள மாட்டேன் என முடிவெடுத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் ஓவியன் கெய்ரான் வில்லியம்ஸன்



அலா அஹமட்

11 வயதுச் சிறுவனொருவன் ஐந்து வருடத்தினுள் 2.5 மில்லியன் யூரோக்களை உழைத்துள்ளான். அவன் வரையும் ஓவியங்கள் ஓவியக் கண்காட்சியில் இருபது நிமிடத்தினுள் விற்பனையாவதுடன் அவனது ஓவியங்களைப் பெறுவதில் பல நாட்டு மக்கள் இணையம் மூலமும் தொலைபேசியூடாகவும் போட்டிபோட்டு கொள்வனவு செய்ய ஆர்வம் காட்டுகின்றனர் என்ற செய்தி அண்மையில் உலகின் பல செய்தி நிறுவனங்களின் முக்கிய செய்திகளில் ஒன்றாக இடம் பிடித்தது. அவனது நேர்காணல் பல செய்தித் தாபனங்களில் ஒளிபரப்பப்பட்டதுடன் இவனது திறமையைக் கண்டு தொழிலதிபர்கள் கூட அதிர்ந்து போனார்கள்.

உண்மையில் உங்களுக்கும் இச்செய்தி ஆச்சரியத்தைத்தந்திருக்கும். இச்சாதனையின் சொந்தக்காரன் இங்கிலாந்தின் தலைநகர் லண்டனின் Nork forkல் வசிக்கும் 11 வயதுச் சிறுவன், அவன் தான் Kieron williamson. Moni monet என்ற செல்லமான புனைப்பெயரால் அழைக்கப்படும் இவர் 2002 ஆகஸ்ட 04 ல் பிறந்தார். Keith இவரின் தந்தை. இவரது தாயின் பெயர் Michell Williamson இவருக்கு Billie- Jo என்ற சகோதரி உண்டு. நீச்சல், மீன்பிடி, கணினி விளையாட்டு, கால்ப்பந்தாட்டம் போன்றன இவரது பொழுது போக்குகளாகும்.

தனது 5 வயதில் தனது குடும்பத்துடன் விடுமுறையைக் கழிப்பதற்காகச் சென்ற கெய்ரான் தனது பெற்றோரிடம் வரைதல் அட்டையை (pad) வாங்கித்தரக் கோரினான். படகுதான் அந்த அட்டையில் வரைந்த அவனது முதலாவது படம். அவனது வரைதல் ஆற்றலைக் கண்ட பெற்றோர் அதிர்ந்து போனாலும் அவன் பின்னர் பெரிய ஓவியனாக உருவாகுவான் என அப்போது நினைக்கவில்லை. ஏனெனில் பெற்றோர்கள் இருவரும் படங்களோ, ஓவியங்களோ வரைவதில் அனுபவசாலிகளல்லர். அந்த விடுமுறையுடன் வரைவதனை நிறுத்தாது தொடர்ந்தும் கெய்ரான் வரைந்தான். இயற்கைக் காட்சிகள் அவனது கை விரல்களினூடாக ஓவியங்களாக மலர்ந்தன.

''இவர் தனது 5 வயதில் விடுமுறையில் முதலாவது ஓவியத்தினை வரைந்தார். அது மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அந்த விடுமுறையின் பின் தொடர்ந்தும் வரைவான் என நாங்கள் நம்பவில்லை. ஆனால், தனது ஆற்றலை மேம்படுத்தினான்'' என தாய் Michell ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவனது ஆற்றலைக் கண்ட பெற்றோர் அவனை வரைதல் வகுப்பில் சேர்த்தனர். அவனினுள் புதைந்திருந்த, மறைந்திருந்த ஆற்றல் ஓவியங்களூடாகப் பரிணமித்தது. பாடசாலைக்குச் சென்றவாறே ஓவியங்களையும் வரையும் கெய்ரான் இயற்கைக் காட்சிகளைத் தத்ரூபமாகவும் வரைகின்றான். பல வர்ண நிறக் கலவைகள் கொண்டு வரை யும் திறன் படைத்த இவரது ஓவியங்கள் பார்ப் போரை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. 2 தொடக்கம் 4 மணித்தியாலத்தினுள் 1 ஓவியத்தினை வரையும் ஆற்றல் கொண்ட கெய்ரானை பல கம்பனிகளும் பல நாட்டு மக்களும் அவனது ஓவியங்களை காட்சிப் படுத்துமாறு அழைப்பு விடுக்கின் றனர்.

இன்றுவரை 8 ற்கும் அதிகமான ஓவியக் கண்காட்சிகளை நடத்தியுள்ள கெய்ரான் தனது 7 வது வயதில் 1 வது ஓவியக் கண்காட்சியை நடத்தினான். அக்கண்காட்சியில் அவரது 19 ஓவியங்கள் 14000 யூரோக்களிற்கு விற்பனையாகின.

(19ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயோடு நானும்

கடந்து சென்ற காலத்தை
மீட்டிப் பார்த்து அழுகிறேன்
தாயே உன் நினைவுகள்
என்றும் வேண்டும் நிரந்தரமாய்

உன் முகம் பார்த்த காலங்கள்
அன்று பெறுமதியாய் உணரவில்லை
இன்று...
உன் முகம் பார்க்கும் உறவுகளையும்
விலைமதிப்பாய் உணர்கிறேன்

உன் மடியில் தூங்கி
எட்டு மாதங்கள் போய்விட்டன...
இன்னும்
எத்தனை வருடங்கள் உன் அரவணைப்புக்கு
நான் தவமிருக்க வேண்டும்?

தாயே இருகரம் ஏந்துகிறேன்
உம்மோடு நானும்
சுவனத்துச் சோலையில்
சுகங்காண வேண்டும்
இன்ஷா அல்லாஹ்!

சப்னா பின்த் நஸீர்
ஆயிஷா சித்தீக்கா கலாபீடம்

# ஏழையின் முகவரி

விந்தையான உலகம் தந்த பரிசு நான்
வீதியின் ஓரங்களே என் வீடுகள்
ஊமை பாஷைகள் எனக்குண்டு
உறவுகளின்றி உறங்கும் விழிகள் இரண்டு
நிலவு தரும் வெளிச்சம் என் விளக்கு
நீல வானம் என் போர்வை
எறும்புக்கும் நுளம்புக்கும் தோழன் நான்
நினைத்தால் வரும் கன்னத்தில் ஈரம் தான்
பார்ப்போரின்றி பாதையில் போகும்
பாதங்கள் பல விதம்
கேட்போரின்றி இந்த உடல் உலாவரும்
வீதியிலின்று
இந்த ஏழையின் முகவரி எங்கே
தேடுகிறேன்
தேடிக்கொண்டே இருக்கிறேன்.

எம்.என்.எப். நிரோஸா, தரம் 11
தி/ ஆயிஷா மகளிர் மஹா வி.
கந்தளாய்

# கல்வி


கல்வி எனும் செல்வத்தை
கருத்துடன் நாம் கற்றிட்டால்
கவலையின்றி எந்நாளும்
கழித்திடலாம் காலத்தை

கல்விக்கு என்றும்
கரையே கிடையாது
கற்பதை தினந்தோறும்
கடைபிடிப்போம் வாழ்விலே

உணர்வு தரும் கல்விதனை
உயிர் உள்ளவரை கற்றிட்டால்
உலகில் எங்கு சென்றாலும்
கிடைக்கும் பல நன்மைகளே

செல்வங்களுள் அழியாச்
கல்விதனை
சிறப்புறக் கற்றால்
சிறப்பாய் நாமும் வாழ்ந்திடலாம்

எம்.ஐ.எப். ஷிஸ்மா, தரம் - 6
பத்ரியா ம.க., மாவனெல்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்


வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

**பின்வரும் உருக்களுடன் மிக நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.**

1\.



i. ii. iii.


2\.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 7 | 8 | 9 | 7 | 8 | 9 | 7 | 8 | 9 |
| 4 | 5 | 6 | 4 | 5 | 3 | 4 | 5 | 6 | 8 | 5 | 4 |
| 1 | 2 | 3 | 7 | 2 | 6 | 1 | 2 | 3 | 1 | 2 | 3 |

i. ii. iii.

**பின்வரும் உருக்களுடன் மிக நெருங்கிய தொடர்பு குறைந்த உருவைத் தெரிவு செய்க.**

3\.



i. ii. iii.

4\.



i. ii. iii.


5\. கீழே உள்ள சொற்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட உருவைத் தெரிக

இயற்கை, வெப்பம், வெளிச்சம்



i. ii. iii.

**பின்வரும் படங்களை அவதானித்து 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**



A B C

D E F


6\. மனிதனுக்கு நன்மை தரக்கூடியவை

i. A, C, D ii. A, B, C iii. E, C, A

7\. ஆபத்து ஏற்படுத்தக் கூடியவை

i. B, F, D ii. A, B, E iii. C, B, E


8\.




உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

i. 4 ii. 3 iii. 5

9\.



இவ்வுருக்களை ஒன்றின் மீது ஒன்றை வைக்கும் போது பெறப்படும் உரு யாது?



i. ii. iii.

10\. **20:15h**

i. முற்பகல், நியம நேரமாகும்.

ii. பிற்பகல், நியம நேரமாகும்.

iii. பிற்பகல், முற்பகல் நேரமாகும்.

11\. சரியான கோவையைத் தெரிவு செய்க.

i. *555+55+5= 615* ii. *555+5+5= 615*

iii. *555+5+5 = 665*

12\. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

i. *100-50-50=50* ii. *100+50+50 = 200*

iii. *100+10-10 = 90*

**பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கான சரியான விடையின் கீழ் கோடிடுக.**

குண்டு குண்டாய் நண்பனுடைய
விலாசம் எழுதுவேன்
குறைவில்லாமல் அஞ்சல் தலையை
உறை மேல் ஒட்டுவேன்
அஞ்சல் பெட்டி வாய்குள் போட்டு
வீடு திரும்புவேன்
அருமை நண்பன் பதிலைக் காண
ஆவல் கொள்ளுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இப்பாடல் குறிப்பிடுவது

i. கதை  ii. கடிதம்  iii. சஞ்சிகை

14. அஞ்சல் தலை என்பது

i. கடிதம்  ii. முத்திரை  iii. உரை

15. விலாசம் என்பதன் ஒத்த பதம்

i. முகவரி  ii. மடல்  iii. அஞ்சல்

16. இப்பாடலை பாடியவர்

i. பாரதியார்

ii. வித்துவான் க. வேந்தனார்

iii. அழ. வள்ளியப்பன்

17. தோழன் என்பதற்கு பாடலில் இடம்பெற்ற ஒத்த சொல்

i. சிநேகிதன்  ii. கூட்டாளி

iii. நண்பன்

**சரியான சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

18. மங்கை (மாழை, மாலை) அணிந்திருந்தாள்.

19. முயல் (வலை, வளை)யில் வாழ்ந்தது.


20. (பாழ், பால்) பூரணமான உணவாகும்.

21. அம்மா ஆசிரியையாகப் (பணி, பனி) புரிகின்றாள்

22. புலி, சிங்கம் போன்றன (ஊன், ஊண்) உண்ணியாகும்.


**அடைப்பிற்குள் அதிக தடவை வந்துள்ளது**

23.




1. இலக்கங்கள்
2. வடிவங்கள்
3. எழுத்துக்கள்

**பின்வரும் தொடர்புகளை விளங்கி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**





24. △ இன் பெறுமானம் யாது?

i. 1  ii. 3  iii. 4

25. □ இன் பெறுமானம் யாது?

i. 3  ii. 2  iii. 1

26.




இக்கடிகாரம் செங்கோண நேரமாக மாறுவதற்கு எவ்வளவு நேரம் தேவை?

i. 1 மணி 15 நிமிடம்

ii. 15 நிமிடம்  iii. 1மணி 30 நிமிடம்

27.




பின்வரும் நிறைகளை இறங்கு வரிசைப்படுத்தினால் கடைசியில் வருவது

i. 1500g  ii. 4kg  iii. 3kg

28. முதலில் வருவது


i. 4kg  ii. 2000g  iii. 3kg

29. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது மு.ப. 11.00 மணிக்கு ஒலித்தது. அடுத்ததாக அது ஒலிக்கும் நேரம் யாது?

i. மு.ப. 3.00 மணி  ii. பி.ப. 1.00 மணி

iii. பி.ப. 2.00 மணி


30.




இக்கடிகாரம் 20 நிமிடங்கள் அதிகமாகக் காட்டுகின்றது. இதன் சரியான நேரத்தை எழுதுக. பிற்பகல் ............... மணி

31. கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.






32. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணத்தில் இருக்கும் இரு சந்தர்ப்பங்களில் உள்ள நேரங்களை காட்டும் விடை யாது?

i. 12.15 உம் 6.15 உம்

ii. 9.00 உம் 3.00 உம்

iii. 2.30 உம் 9.30 உம்

33. பத்தாயிரத்து இருநூற்று ஒன்று என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னிலிருந்து முன்னாக எழுதும் போது கிடைக்கும் எண் யாது?

i. 100201  ii. 10201  iii. 1021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. இருபதாயிரத்து இருநூறு என்பதை இலக்கத்தில் எழுதும் போது சரியாக எழுதியது.

i. 2020 ii. 20200 iii. 2200

35. மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

i. 4000 + 40 + 4 = 4444

ii. 4000 + 400 + 40 + 4 = 4444

iii. 4000 + 400 + 40 + 14 = 4444

**பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்துக.**

36. ளை-து-ஊ-ட-ட்-இ .....................

37. ல-ன-ந்-ம-ர்-த .........................

38. கே-து-ரு-யி-அ-ங்-இ-ந் ..........................

39. ற்-ம்-த-அ-பு .......................

40. டீ-க்-சோ-கி-ட்-ர-ஸ் ......................

**சரியான விடைக்கான படத்தைத் தெரிந்து கோடிடுக.**


41. கறியாக சமைக்கவும் பழமாக உண்ணக் கூடியதும்

i.  ii.  iii. 

42. தரையில் ஓடும் ஆகாயத்தில் பறக்கும் வாகனம்

i.  ii.  iii. 

43. அழகாக ஆடும் முட்டை இடாது

i.  ii.  iii. 

44. பச்சையாகவும் சமைத்தும் சாப்பிக் கூடியது

i.  ii.  iii. 

45. இரவில் காண முடியாதது

i.  ii.  iii. 

**மிகச் சரியான வாக்கியத்திற்கு கோடிடுக.**

46. i. சூரியன் உதயமாகின
ii. தாமரைகள் மலர்ந்தன
iii. பருந்து பறந்தன.

47. i. நேற்று நீ வருவாயா?
ii. நாளை நீ வந்தாயா?
iii. இன்று சமைக்கின்றாயா?

48. i. நானும் நீயும் நண்பர்கள்
ii. நானும் அவனும் நண்பன்
iii. அவள் எனது நண்பன்

49. i. நீ வந்தாய்
ii. அவன் வந்தார்கள்
iii. நீங்கள் ஓடினார்கள்

50. i. அவர் நல்லவர்கள்
ii. அவர் நல்லவர்
iii. அவர் நல்லவன்

## வினாப்பத்திரம் 1 விடைகள்

| | |
|---|---|
| 1. iii | 26. i |
| 2. ii | 27. i |
| 3. i | 28. i |
| 4. iii | 29. iii |
| 5. i | 30. 3.20 மணி |
| 6. iii | 31. ii |
| 7. i | 32. ii |
| 8. ii | 33. ii |
| 9. iii | 34. ii |
| 10. ii | 35. ii |
| 11. i | 36. ஊளை இட்டது |
| 12. i | 37. மலர்ந்தன |
| 13. ii | 38. அங்கேயிருந்து |
| 14. ii | 39. அற்புதம் |
| 15. i | 40. சோக்கிரட்டீஸ் |
| 16. iii | 41. வாழை |
| 17. iii | 42. ii |
| 18. மாலை | 43. iii |
| 19. வளை | 44. ii |
| 20. பால் | 45. i |
| 21. பணி | 46. iii |
| 22. ஊன் | 47. iii |
| 23. i | 48. i |
| 24. i | 49. i |
| 25. i | 50. ii |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

**பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஒரே நாட் டில் நடைபெறுவதில்லை. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு நாடுகளில் நடைபெறுகின்றன. ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பநாளில் போட்டியாளர்களின் அணிவகுப்பு நடைபெறும். ஓம்பிக் கொடி பறக்க விடப்படும். ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு விளையாட்டு வீரர்களால் உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்படும்.

ஒலிம்பிக் கொடி வெள்ளை நிறத்துணியால் ஆனது. அக்கொடியில் கறுப்பு, நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களினாலான ஐந்து வளையங்கள் காணப்படுகின்றன.

1. ஒலிம்பிக் கொடி எந்த நிறத்துணியால் ஆனது? ..........................................
2. எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன? ........
3. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் வளையங்கள் எதனைக் குறிப்பிடுகின்றன? .........
4. ஒலிம்பிக் அணிவகுப்பில் கலந்து கொள்வோர் யார்? ..........................................

**பின்வரும் சொற்களுக்கு எதிர்கருத்து தருக.**

5. நவீனம் ...............................

6. ஆரம்பம் ...............................

**பின்வரும் சொற்களுக்கு பந்தியில் காணப்படும் அதே கருத்தைத் தரும் சொற்களைத் தருக.**

7. புதிய ....................

8. விளக்கு .....................

**இலங்கை சார்பாக ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய இருவரின் பெயர்களைத் தருக.**

9. .............................

10. .............................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

11. World ..............................


12. Today ..............................

**பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை தமிழில் எழுதுக.**

13. அம்ப ..............................


14. பாயனவா ..............................

15. பின்வருவனவற்றில் பார்வைத் திறன் மிக்க பிராணி எது?



i ii iii iv

16. பின்வருவனவற்றில் பயிர்களுக்கு நன்மை செய்யும் பிராணி எது?





i ii iii iv

17.  அருகில் உள்ள வீதிச் சமிக்ஞை மூலம் புலப்படுத்தப்படுவது

1. முன்னால் பாதசாரிகள் கடவை
2. பாதசாரிகள் பாதையை கடக்குமிடம்
3. அருகில் பாதைக் கடவை

**அருகில் காணப்படும் கருவியின் பெயர்களை எழுதுக.**

18.  19.  20. 



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் பெயர் அடைமொழிகளுக்கு கோடிடுக.**

21. அழகிய பூக்கள் காலையில் மலர்ந்தன

22. சிறுவன் சிவந்த அப்பிள் பழத்தைக் கடித்தான்.

23. வாலை ஆட்டியது பெரிய நாய்

24. நட்சத்திரங்கள் நீல வானில் மின்னின.

**கட்டத்தினுள் காணப்படும் முடிக்கும் சொற்களைக் கொண்டு வசனங்களைப் பூர்த்தி செய்க.**

| |
|---|
| கடைப்பிடிப்போம், வருவார்கள், ஓடின, வந்தேன், வந்தாயா, ஓடியது, உழுதார்கள் |

25. உழவர்கள் வயலை ...............................

26. நீ பாடசாலைக்கு ...............................

27. நாம் நல்ல விடயங்களைக் .......................

28. அவை பாய்ந்து ...................................

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

29. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
1. எருக்கலை 2. கொய்யா
3. மரமுந்திரிகை 4. பலா

30. இரவில் உலாவித் திரியும் விலங்கு
1. காகம் 2. எலி
3. ஊர்க்குருவி 4. கிளி

31. இலங்கைக்குரிய பறவை எது?
1. நாகணவாய் 2. கிளி
3. காகம் 4. புறா

32. மரவள்ளிக் கிழங்கில் அதிக அளவில் அடங்கியுள்ள போசணைப் பொருள்
1. புரதங்கள் 2. விற்றமின்கள்
3. காபோவைதிரேற்றுகள் 4. உப்புக்கள்

33. இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளும் பிராணி
1. புறா 2. கொக்கு 3. கழுகு 4. மைனா

34. இலையானினால் ஏற்படும் நோய்
1. கழிச்சல் 2. வாந்திபேதி
3. மலேரியா 4. டெங்கு

35. காந்தத்தை அருகில் கொண்டுவரும் போது பின்வரும் எப்பொருள் கவரப்படும்.
1. பித்தளை 2. அலுமினியம்
3. செம்பு 4. இரும்பு

36. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எம்மை பாதுகாக்க மிகவும் உகந்த முறை
1. மரத்தின் கீழ் நிற்றல்
2. விளையாட்டு மைதானத்தில் விளையாடுதல்
3. வீட்டினுள் இருத்தல்
4. நீரினுள் இருத்தல்

37. இலங்கையில் விலங்குகளை வளர்த்து பால் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இருக்கும் பிரதேசம்
1. வெலிசறை 2. அம்பேவெல
3. கொழும்பு 4. கண்டி

38. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு ஒன்று
1. அரச இலை 2. சந்திரன்
3. பாம்பு 4. அன்னம்

39. சிறிய தீக்காயத்திற்குப் பயன்படுத்தப்படும் மூலிகை
1. வேம்பு 2. பூவரசு
3. கற்றாளை 4. ஆமணக்கு

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான சரியான விடையை எழுதுக.**

40. 17, 20, 21, 30, 25, 40, ........., ...........

41. 100, 5, 90, 10, 80, 15, .........., ...........

42. காசியப்பன் என்ற அரசனால் எழில் மிக்க குன்றாக அமைக்கப்பட்ட சித்திரக் குன்றம் என அழைக்கப்படுவது
1. சிவனொளிபாதம் 2. மிகிந்தலை
3. சீகிரியா

43. தரப்பட்ட எண்ணைச் சொற்களில் எழுதுக.
10010 ...............................................

**தரப்பட்டுள்ள எண்களை உரோம இலக்கங்களில் எழுதுக.**

44. 19 ...................... 45. 49 .......................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருக்கல் * எனும் குறியினாலும் பிரித்தல் # எனும் குறியினாலும் குறித்து பின்வருவனவற்றின் பெறுமானத்தைக் காண்க.**

46. 70 # 10 * 3 = ......................

47. 12 * 5 # 10 = ......................

**கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பயன்படுத்தி 5இன் மடங்குகளை அட்டவணையில் ஒழுங்கு முறையில் எழுதுக.**

48.

| | | |
|---|---|---|
| 25 | 65 | 15 |
| 30 | 70 | 40 |
| 50 | 18 | 20 |
| 39 | 22 | 75 |

| 5இன் மடங்கு |
|---|
| |
| |
| |
| |

49. புகையிரத நிலையத்திற்கு 13:20 மணியளவில் வரவேண்டி புகையிரதம் 30 நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கேற்ப புகையிரதம் வரும் நேரம் யாது?

50. தண்டில் காய்க்கும் தாவரம் எது?

1. நாவல் 2. அகத்தி
3. பலா 4. பூவரசு

51. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது.

1. வடமேல் மாகாணம்
2. மேல் மாகாணம் 3. தென் மாகானம்

52. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டு எது?

1. உதைப்பந்தாட்டம்
2. கிட்டிப்புள் 3. கரப்பந்தாட்டம்

**இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என பொருத்தமான காலத்தை எழுதுக.**

53. தனயன் தகப்பனோடு கோபித்தான் ...........

54. வானில் விடிவெள்ளி தோன்றியது ............

55. அவர்கள் சாதனை புரிவார்கள் ....................

56. நாம் இறைவனை வழிபடுகின்றோம் ........

**பின்வரும் பழமெழிகளை பூர்த்தி செய்க.**

57. கந்தையானாலும் ..........................

58. உப்பிட்டவரை ..........................

''அதிகாலைப் பொழுதில் நான் கண்ட பசுமையான காட்சிகள்'' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

..........................................................................

..........................................................................

## வினாப்பத்திரம் 2 விடைகள்

1. வெள்ளை
2. 4
3. கண்டங்களை
4. விளையாட்டு வீரர்கள்
5. புராதனம், பழைமை
6. முடிவு
7. நவீன
8. தீபம்
9. டங்கன்வைட்
10. சுசந்திகா
11. உலகம்
12. இன்று
13. மாங்காய்
14. உதிக்கிறது
15. i
16. ii
17. i
18. கரப்பான்
19. கொம்பு
20. புல்லாங்குழல்
21. அழகிய
22. சிவந்த
23. பெரிய
24. நீல
25. உழுதார்கள்
26. வந்தாயா
27. கடைப்பிடிப்போம்
28. ஓடியது
29. i
30. ii
31. i
32. iii
33. iii
34. i
35. iv
36. iii
37. ii
38. ii
39. iii
40. 29, 50
41. 70, 20
42. iii
43. பத்தாயிரத்து பத்து
44. xix
45. xLix
46. 21
47. 6
48. 15, 20, 25, 30
49. 13:50 மணி
50. iii
51. ii
52. ii
53. இறந்தகாலம்
54. இறந்தகாலம்
55. எதிர்காலம்
56. நிகழ்காலம்
57. கசக்கிக் கட்டு
58. உள்ளளவும் நினை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் பெரிய பாலைவனங்கள்

## தார் பாலைவனம்

- இது இந்தியா மற்றும் பாகிஸ்தான் பிரதேசங்களில் காணப்படுகின்றது.
- இது 77,000 சதுர மைல் பரப்புடையதாகவும் உலகின் 9 வது பெரிய பாலைவனமாகவும் காணப்படுகின்றது.
- இப்பாலைவனத்தில் 61 சதவீதமான பகுதி இந்தியாவின் ராஜஸ்தானில் உள்ளது.
- இங்கு 60 வகையான பாலூட்டிகள், 350 வகையான பறவைகள், 25 வகையான ஊர்வன, 142 வகையான மீனினம் போன்றன வாழ்கின்றன.





## அந்தாட்டிக் பாலைவனம்

- இது உலகில் மிகப்பெரிய துருவப் பாலைவனமாகும்
- இது அந்தாட்டிக்கா கண்டத்தைச் சூழ்ந்து காணப்படுகின்றது
- இது 5,3395,79 சதுர மைல் பரப்புடையதாகும்
- இதனது 95 வீதமான பகுதி பனி படர்ந்துள்ளது
- இங்கு நீர்நாய், பென்குயின், நூற்புழுக்கள் பாசித்தாவரங்கள் போன்றன வாழ்கின்றன



## சஹாராப் பாலைவனம்

- உலகின் மிகப் பெரிய உஷ்ண பாலைவனமாகவும் 3 ஆவது பெரிய பாலைவனமாகவும் இது. காணப்படுகின்றது
- இது வட ஆபிரிக்காவில் காணப்படுவதுடன் 3,629,360 சதுர மைல் பரப்புடையதாகும்
- 12 நாடுகள் இப்பாலைவனத்துடன் தொடர்புபட்டுள்ளன
- நைல், நைகர் போன்ற நதிகளும் இரும்புத்தாதுக்கள், யுரேனியம், பொஸுப்பேற்று போன்ற கனிப்பொருட்கள் இங்கு காணப்படுகின்றன
- பல்லி, மணல்விரியன், தீக்கோழி, தேள், சஹாரா சிறுத்தை, ஒட்டகம், ஆடு போன்றன இங்கு வாழும் முக்கிய உயிரினங்களாகும்



## அரேபியன் பாலைவனம்

- இது உலகில் மிகப்பெரிய மணல் பாலைவனமாகும்
- இது 899,618 சதுர மைல் பரப்புடையதாகும்
- இது அரபு தீபகற்பம் பூராகவும் பரந்துள்ளதுடன் பெரும்பாலான நிலப்பகுதி சவூதி அரேபியாவில் காணப்படுகின்றது
- மணல் பூனை, பல்லி, மான், ஒட்டகம் போன்ற விலங்குகள் இங்கு வாழ்கின்றன.
- கோடைகாலத்தில் இங்கு 50°C ஆக வெப்பம் காணப்படும்


## கோபி பாலைவனம்

- இது சீனாவின் வட பகுதியிலும் மொங்கோலியாவின் தென் பிரதேசத்திலும் பரந்து காணப்படுகின்றது
- இது 500,000 சதுர மைல் பரப்புடையதாகும்
- இது ஆசியாவின் மிகப்பெரிய பாலைவனமாகும்
- இது உலகின் 5 ஆவது பெரிய பாலைவனமாக கருதப்படுகின்றது
- டைனோசர்கள் அடங்கலாக பல தொல்பொருள் எச்சங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன
- இங்கு குளிர்காலத்தின் வெப்பநிலை 40°C ஆகவும் கோடை காலத்தில் 50°C ஆகவும் காணப்படும்
- இங்கு ஆசிய காட்டுக்கழுதை, மலைஆடு, சாம்பல் ஓநாய், தங்கக் கழுகு, பனிச்சிறுத்தை போன்றன வாழ்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Islamic Book House இன் 2014ஆம் ஆண்டிற்கான வெளியீடுகள்




Rs. 200.00




Rs. 300.00



Rs. 90.00





Rs. 300.00




Rs. 320.00





Rs. 165.00




Rs. 250.00




Rs. 120.00





Rs. 200.00




Rs. 300.00




Rs. 275.00




Rs. 350.00




Rs. 265.00




Rs. 250.00




Rs. 150.00




Rs. 350.00

**இஸ்லாமிக் புக் ஹவுஸ்** B .Dematagoda Road, Colombo 09 ,77

Tel: 0112684851, Fax: 0112688102 | Web: www.ibh.lk

www.facebook.com/Ibh.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org